ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



# ஶ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா


| ஸம்புடம் 8 | விரோதி ௵ ஆடி மீ | ஸஞ்சிகை 7 |
|---|---|---|


"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

## ஶ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஶ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

### ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா சந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேச் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸர்வ ஸௌஹார்த்த குணம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீ ரங்கம்]

———:o:———

ச்வேதாச்வதரோபநிஷத்தில் ஸர்வேச்வரன் 'ஸர்வஸ்ய ஶரணம் ஸுஹ்ருத்' என்கிற வாக்யத்தினால் ஸர்வ ப்ராணிகளிடத்திலும் அநுகூலமான மநஸ்ஸை உடையவனாகச் சொல்லப்படுகிறான். பகவத் கீதையிலும், 'ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா' என்று ஸர்வேச்வரனே தன்னை ஸர்வ பூத ஸுஹ்ருத்தாகச் சொன்னான். இவ்விஷயம் 'ஸக்ருதேவ........அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம' என்றும், 'ஶூஜ்ஞா நஜாநாதி ரணாதிகுதஶ்சந' என்றும், 'விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவண: ஸ்வயம்' என்றும், 'மாதரம் ரக்ஷ கைகேயீம்', 'மயா ச ஸீதயா சைவ ஶப்தோஸி' என்றும், ஸ்ரீ ராம வாக்யங்களினாலும் சொல்லப்படுகிறது. ராமனோடு ஸஹதர்மசாரிணியான ஸீதா தேவியினுடைய 'மித்ரமௌபயிகம்' என்கிற வாக்யத்தாலும் இது வ்யக்தம்.

இப்படி இந்த ஸர்வ ஸௌஹார்த்த ரூப மஹா குணமானது ஈச்வரர்களிடத்தில் இருப்பதால், இது அவர்களுக்கு அதிசயத்தை உண்டு பண்ணுவதோடு, ஸம்ஸாரிகளுடைய துக்க நிவ்ருத்திக்கும் சாச்வதமான ஸுகங்களை அடைவதற்கும் ஹேதுவாகிறது. இம்மஹா குணம் மனிதர்களிடத்தில் இருந்தால், இவ்வுலகில் ஸர்வ ப்ராணிகளுக்கும் ஆநுகூல்யத்திற்கு ஹேதுவாயிருப்பதோடு,

> 'சராசராணி பூதாநி ஸர்வாணி பகவத்வபு: ।
> அதஸ்ததாநுகூல்யம் மே கார்யமித்யேவ நிஶ்சய: ॥'

என்று சரணாகதியின் அங்கமான ஆநுகூல்ய ஸங்கல்பத்தில் பர்யவஸித்துப் பரம்பரயா மோக்ஷ ப்ராப்திக்கும் ஹேதுவாகிறது. அவற்றுள் இம்மஹா குணம் இவ்வுலக வாழ்க்கையில் பண்ணுகிற ஆநுகூல்யத்தை,

> 'ராஜேவா நுவஶ்யோ நாஸூயஹிம்ஸ பராவரஜ்ஞ: ।'

என்று அயோத்யா வாஸி ஜநங்கள், ஸ்ரீ ராமபிரான் தனக்கு சத்ருவான கைகேயி விஷயத்தில்,

> 'மாதரம் ரக்ஷ கைகேயீம் மா ரோஷம் குரு தாம் ப்ரதி ।
> மயா ச ஸீதயா சைவ ஶப்தோஸி ரகுநந்தந ॥'

189260

என்று பரதனைக் குறித்துச் சொன்னதையும், மற்றொரு ஶத்ருவான ராவணனைக் குறித்து,

‘ கச்சானுஜாநாமி ரணார்திதஸ்த்வம் ப்ரவிஶ்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம் ।
ஆஶ்வாஸ்ய நிர்யாஹி ரதீ ச தந்வீ ததா பலம் ப்ரேக்ஷ்யஸி மே ரதஸ்த: ।’

என்றும்,

‘ க்ருதம் த்வயா கர்ம மஹத் ஸுபீமம் ஹதப்ரவீரஶ்ச க்ருதஸ்த்வயாஹம் ।
தஸ்மாத் பரிஶ்ராந்த இதி வ்யவஸ்ய ந த்வாம் ஶரைர் ம்ருத்யுவஶம் நயாமி ॥’

என்றும், ‘ நீ யுத்தத்தில் என்னுடைய போர் வீரர்களைக் கொன்று, அதனால் நீ களைத்துப் போனவன்போல் காணப்படுகிறாய்; ஆகையால் உன்னை ஹிம்ஸிக்க இஷ்ட மில்லாதவனாக இருக்கிறேன்’ என்று சொன்னதையும் பார்த்து, தாங்களும் தங்கள் ஶத்ருக்களை ஹிம்ஸை செய்ய இஷ்டமில்லாமல் ஒருவர்க்கொருவர் அன்போடிருந்தார்கள் என்கிற வால்மீகி பகவானுடைய வாக்யங்களில் காணலாம். அதுபோலவே அகஸ்த்ய முனிவருடைய ஆச்ரமத்தில்,

‘ ஸ்நிக்தபத்ரா யதா வ்ருக்ஷா: யதா க்ஷாந்தா ம்ருகத்விஜா: ।
ப்ரஶாந்தம்ருகயூதஶ்ச நாநாஶகுநிநாதித: ॥’

என்றும், ஶாஸ்த்ர வச்யதை யில்லாத ம்ருகங்களும் பக்ஷிகளும்கூடத் தங்களுடைய ஸ்வபாவமான ப்ராணி ஹிம்ஸையை விட்டு ஒன்றுக்கொன்று ஸௌஹார்த்தத்தோடு இருந்தனவென்று சொல்வதாலும்,

‘ யதாப்ரப்ருதி சாக்ராந்தா திகியம் புண்யகர்மணா ।
ததாப்ரப்ருதி நிர்வைரா: ப்ரஶாந்தா ரஜநீசரா: ॥’

என்று அகஸ்த்ய மஹர்ஷி தக்ஷிண திக்குக்கு வந்தது முதல் ஹிம்ஸாஜீவிகளான ராக்ஷஸர்களும்கூட ஹிம்ஸையில் ஆசை ஒழிந்து ஸர்வ ப்ராணிகளிடத்திலும் அன்போ டிருந்தார்க ளென்று சொல்வதாலும்,

‘ ருக்ஷாஶ்ச ஸ்ருமரா வ்யாக்ரா: ஸிம்ஹா நாகா: ஸரீஸ்ருபா: ।
பரிவார்யோபஸர்பந்தி தாதாரம் ப்ராணிநோ யதா ॥’

என்று நிஶாகருடைய ஆச்ரமத்தில் மாம்ஸ ஜீவிகளான புலி ஸிம்ஹம் முதலிய துஷ்ட ஜந்துக்களும் தங்களுடைய ஹிம்ஸா ஸ்வபாவத்தை விட்டுப் பரஸ்பரம் ஸ்நேஹத்தோ டிருந்தனவாகச் சொல்வதாலும், இவ்வுலகத்தில் இம்மஹா குணத்தின் மஹிமை வ்யக்த மாகிறது. ஆனால் அகஸ்த்யரும் நிஶாகரும், ‘ ஊன்வாட வுண்ணா துயிர்காவ லிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து, தான்வாட வாடத் தவஞ்செய்ய வேண்டா ’ என்றும், ‘ காயோடுநீடு கனி யுண்டுவீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்கால மைந்து, தீயோடு நின்று தவஞ் செய்யவேண்டா ’ என்றும் சொல்லப்படுகிற அருந்தவம் புரியும் ஸ்வபாவ

முடையவர்க ளாகையாலே, '𑌨𑌾𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌤𑌪𑌸𑌾 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍' என்றும், '𑌅𑌨𑍍𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌲𑍋𑌕𑍋 𑌵𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌃' என்றும் சொல்லுகிற படியே தபஸ்ஸினுல் ஸர்வ கார்யங்களையும் செய்யக்கூடு மாகையாலும், அவர்களுடைய ஸந்நிதியில் ப்ராணிகள் விரோத மில்லாமல் ஸ்நேஹத்தோ டிருந்த தற்குக் காரணம், அங்கு '𑌵𑍃𑌣𑍍𑌵𑌤𑍍 𑌕𑌷𑍍𑌟𑌾' என்று சொல்லப்படுகிற தபஸ்தான் என்று சொல்வது உசிதமானுலும் ஆகலாம். அதில்லாவிட்டாலும் அம்மஹர்ஷிகள் அஷ்டாங்க யோகாப்யாஸ நிஷ்டர்க ளாகையாலே, அவற்றுள் முதலாவது அங்கமான 'யமம்' என்கிறதில் சேர்ந்த அஹிம்ஸா தர்மாநுஷ்டாந விஷயத்தில்,

'𑌅𑌹𑌿𑌂𑌸𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌤𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌵𑍈𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 ।'

என்று பாதஞ்ஜல யோக ஸூத்ரத்தில் சொல்லுகிறபடியே அவர்களிடம் அஹிம்ஸா தர்மம் ப்ரதிஷ்டிதமா யிருந்தாலும், அந்தக் காரணத்தாலும் அவர்களுடைய ஸந்நிதியில் ஸர்வ ப்ராணிகளுக்கும் வைர த்யாகத்தோடு ஸௌஹார்த்தம் ஸம்பாவித மாகலாம். அப்படிப்பட்ட அருந்தவங்களும் அஷ்டாங்க யோகாப்யாஸமும் இல்லாதவனுன தர்மபுத்ரனுடைய ராஜ்ய காலத்திலும்,

'𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑌾𑌸𑌤𑌿 𑌰𑌾𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌮𑍃𑌗𑌵𑍍𑌯𑌾𑌳 𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌾𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌮𑌨𑍁𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌤𑌾 𑌨 𑌹𑌿𑌂𑌸𑌨𑍍𑌤𑌿 𑌕𑌦𑌾𑌚𑌨 ॥'

என்று ஒன்றை ஒன்று கொன்று ஜீவிக்கும் துஷ்ட ஜந்துக்கள்கூட ஹிம்ஸையை விட்டு ஸ்நேஹத்தோ டிருந்தனவாகப் பாரதத்தில் ஆச்வமேதிக பர்வத்தில் சொல்லியிருப்பதால், தர்ம புத்ரனிடத்தில் ப்ராணிகள் த்வேஷ மற்று ஸௌஹார்த்தத்தோடு இருந்ததற்குக் காரணம், அவனிடத்தி லிருக்கும் தர்மாநுஷ்டாந விஶேஷ மென்றே சொல்லவேண்டும். தர்மபுத்ரன் உலகத்தி லிருந்த போது அவனுடைய தேர் உபரிசரவஸுவினுடைய தேர் போலப் பூமி ஸம்பந்த மில்லாமல் ஓடினதாகச் சொல்லுவதாலும், அவன் தன் ஶரீரத்தோடு ஸ்வர்க்கத்துக்குப் போனதாகப் பாரத வாக்யம் சொல்லுவதாலும்,

'𑌭𑍋 𑌭𑍋 𑌧𑌰𑍍𑌮𑌜 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌭𑌿𑌜𑌨 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 ।
𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌮𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠 𑌤𑌾𑌵𑌨𑍍𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌕𑌮𑍍 ॥
𑌆𑌯𑌾𑌤𑌿 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌷𑍇 𑌵𑌾𑌤𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑌮𑍀𑌰𑌣𑌃 ।
𑌤𑌵 𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌗𑌸𑍍𑌤𑌾𑌤 𑌯𑍇𑌨𑌾𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌸𑍁𑌖𑌮𑌾𑌗𑌮𑌤𑍍 ॥'

என்று அவன் உடம்பில் பட்ட காற்றினுடைய ஸம்பந்தத்தினுல் நரகமே சுவர்க்க மானதாகச் சொல்வதாலும், அம்மஹாபுருஷனிடம் உயர்ந்த புண்ய விஶேஷங்கள் இருந்தனவாகத் தெரிகின்ற தல்லவா? ஆகையால் ஸர்வபூத ஸௌஹார்த்த மென்கிற மஹாகுணத்திற்குக் காரணம், அருந்தவங்களும் அஹிம்ஸா தர்ம ப்ரதிஷ்டையும் மற்றும் விலக்ஷணமான தர்ம விஶேஷமுமே என்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

இப்படி அருந்தவம் புரிந்தும், அஷ்டாங்க வேதாப்யாஸம் செய்தும், மஹர்ஷிகளும் மஹாராஜாக்களும் ஸம்பாதித்த ஸர்வபூத ஸௌஹார்த்த ரூபமான ஆத்ம குணத்தை அப்படிப்பட்ட ச்ரமமான கார்யங்களைச் செய்யாமலே புலஸ்த்ய வஸிஷ்ட வரப்ரதாந மாத்ரத்தினால் ஸ்ரீ பராஶர மஹர்ஷியானவர் பரதத்வாதி விஷயங்களில் தெளிவையும் ஸர்வபூத ஸௌஹார்த்த குணத்தையுமுடையவராய், ஶத்ரு மித்ர விபாக மின்றிக்கே ஸர்வ மநுஷ்யர்களுக்கும் மோக்ஷ ஸாம்ராஜ்ய ஸம்ருத்தியை ப்ரார்த்தித்தாற்போலவும்,

'[illegible] ।
[illegible] ॥'

என்று ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ க்ருபாபாத்ர பூதனான ப்ரஹ்லாதாழ்வான் தத்அநுக்ரஹ லப்த ஸர்வ பூத ஸௌஹார்த்த குணத்தையுடையனாய்,

'[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥'

என்று தனக்கு ஶத்ருக்கள் ஒருவருமில்லையென்று சொன்னதோடு,

'[illegible] ।
[illegible] ।
[illegible] ॥'

என்று தன்னை ஸர்வ ப்ரகாரங்களினாலும் ஹிம்ஸித்த ஹிரண்ய கஶிபுவின் பகவதபசாரத்தையும், அதிலும் கொடியதான பாகவதபசாரத்தையும் பொறுத்தருளும்படி ப்ரார்த்தித்தாற்போலவும், நம் ஸ்ரீ அழகிய சிங்கரும், ஸர்வாதிஶாயி ஷாட்குண்யாஸ்பதமாய் அர்ச்சாரூபியா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடையவும் அவனுடைய திருமந்த்ரமான மந்த்ர ராஜனுடையவும் நித்யோபாஸநத்தினாலே [illegible] துல்யமான தத்வ ஹித புருஷார்த்த விஷயமான தெளிவை யுடையவராய் எழுந்தருளியிருக்கையாலே, ஸர்வ பூதங்களிடத்திலும் 'ஸர்வபூதாத்மகே' என்கிறபடியே பகவச் சரீரத்வ புத்தியினாலே ஸர்வாத்மாக்களிடத்திலும் ஶத்ரு விபாகமின்றிக்கே ஸௌஹார்த்தத்தோடும், தமது விஷயத்திலும், பகவத் விஷயத்திலும், ப்ரதிகூலாசரணம் பண்ணுகிறவர்கள் விஷயத்திலும்,

'[illegible] ।
[illegible] ॥'

என்கிறபடியே அநவதிக க்ருபையாலே, ‘சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ’ என்று சொன்ன ஸ்ரீ சடகோபன் போலவும், ‘நாவ்ரஷ: கஸ்யசித் ப்ரூயாத்’ என்கிற விதி வாக்யத்தையும் ஆசார்ய நியமநத்தையும் மறந்து, திரளிலே தாமாகவே ரஹஸ்யார்த்தத்தை உபதேஶிக்கும்படி பண்ணின க்ருபைக்கு ஸிந்துவான பகவத் ராமாநுஜன் போலவும், தமது ப்ராதிகூல்யத்தைப் பராமர்ஶிக்காதே ஶத்ருக்கள் விஷயத்திலும் பரம ஸௌஹார்த்தத்தோடு ஶாச்வத ஸுகோபாயமான ப்ரஹ்ம வித்யையையும் உபதேஶித்துப் போருகையாலும், ப்ரதிகூலர்கள் விஷயத்தில் மற்றும் பற்பல உபகாரங்களையும் பண்ணிப் போருகையாலும், ஸ்ரீ அழகியசிங்கருடைய ஸர்வபூத ஸௌஹார்த்த குணம் ஸுவ்யக்தமாக ஆகிறது.

இப்படி ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸர்வபூத ஸௌஹார்த்த குணம் அவரிடத்தில் மாத்ரம் நிலைபெற்றிருக்கை யன்றிக்கே, ஸ்ரீ அழகிய சிங்கருடைய கடாக்ஷ பாத்ரர்களான மற்றும் ப்ராஹ்மணர்களிடத்திலும் உபதேஶாநுஷ்டாநங்களினால் ஸங்க்ரமித்து வளர்ந்து வருவதால், அந்த ப்ராஹ்மணர்களும் ‘ராஜைவ நாபவஸ்யந்தொ நாஸ்ய ஹிம்ஸந்து பரஸ்பரம்’ என்கிறபடி இருந்த அயோத்யாவாஸி ஜநங்களைப்போல, அவரவர்கள் ஶத்ருக்கள் விஷயத்திலும் ஹிம்ஸா ருசியைத் தவிர்த்து அநுகூலராயிருப்பதோடு,

‘ப்ராஹ்மணா மணிகா வைடூர்யா ஹாரஜேயாஸ் கஞ்சுகா: ॥
அரஷ்டாதேரண கூவந்தி ந ஜானே தத்ர காரணம் ॥’

என்று சொல்லப்படுகிற நிர்ஹேதுக கோபங்களையும் விட்டு, பரஸ்பர ஸௌஹார்த்த ஸம்பூர்ணர்களாய் இங்கிருப்பதைப் பார்த்து, இதற்கும் காரணமான ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸர்வபூத ஸௌஹார்த்த குணத்தில் ஈடுபட்ட நாம் அந்த உத்தம குணத்துக்குப் பல்லாண்டு பாடி ஸந்துஷ்டராகிறோம்.

‘ஸ்ரீரங்கேஶயதீந்த்ராணாம் ஸத்குணாகர்ஷசேதஸா ।
ஸ்ரீநிவாஸாய விதுஷா ஸூக்திமாலா ஸமர்பிதா ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(எட்டாம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

நாரதர் :—மஹாராஜரே! என் கவலை? ஒருக்காலும் ஜீவன் உம்முடைய மோஹ மார்க்கங்களி லிருந்து விலகமாட்டான்.

மஹாமோஹன் :—[கோபத்துடன் உடம்பு குலுங்க] பகவானே! விவேகன் மஹா பாபி. தகப்பனுடைய ஸுகங்களை யெல்லாம் அடியோடு வேரறுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறான். [ஆகாயத்தை நோக்கிக் கொண்டு கையால் சுட்டிக் காட்டிக்கொண்டு] அடே பாபி! மூட! விவேகப் பதரே! உலக வாழ்க்கையையே த்வேஷிக்கும் துஷ்டனே!

"ஶோகாம்போதிம் கத2ம் நவா ஶோஹவீரஸ்த்ரோகீ
வெறுாஹெந வ்யாஸாஸங்கொவிஹ உஹ்ராணம் த்ரு(?) ।
பஹுஸம்பவூவ்ய தமிஹஹ்ரோஹாவாவிஹ்
கீர்த்தாஹஶ்ச: க்ருவணஹவ தாகிஹ்த்ருஷ் ஶ்ரோதவ்யா ॥"

மஹாமோஹன் தன்னுடைய ஆச்சர்ய ஶக்திகளையும் செய்கைகளையும் சொல்லிக்கொண்டு, 'இப்படிப்பட்ட கொடிய ஶத்ரு வீரனாகிய என்னை நீ கண்டதில்லையோ அல்லது கேட்டதில்லையோ?' என்கிறான். [வேணீ ஸம்ஹார நாடகத்தில், த்ரோணரை த்ருஷ்டத்யும்நன் கொன்றபின் அச்வத் தாமனுக்குக் கோபம் விஞ்சி அவன் கூறிய ச்லோக மொன்றில், 'என் தகப்ப னார் என் விஷயமான பொய் வார்த்தையைக் கேட்டுத் துக்க ஸாகரத்தில் மூழ்கி ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுக் கண்களை மூடி நிச்சலரா யிருக்கை யில் அவரைக் கொல்லத் துணிந்த உனக்குப் பாண்டு பாஞ்சால ஸேனைகளைப் பஞ்சுக் குவியலைப்போல் பறக்க அடிக்கும் ப்ரளயப் புயற் காற்றுப்போன்ற அச்வத்தாம னென்னும் வில்லாளி உன் ஞாபகத்திற்கு வரவில்லையோ?' என்று உத்கோஷித்தான்.] அதுபோல இங்கே இவன் கோபாவேசப் பேச்சு. 'கிம் நயாத: ஶ்ருதிம் தே?' என்று அங்கே கேள்வி. 'கிம் நத்ருஷ்ட: ஶ்ருதோ வா'—[என்னை நீ பார்த்ததில்லையா? மஹாராஜனைப் பார்க்கக் கிடைக்காவிடினும் கேட்டது மில்லையா?] என்று இங்கே கேள்வி. 'த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்ய:' என்று ப்ரஹ்ம விஷயமான த்ருஷ்டி ச்ரவணங் களைப்பற்றிய உபநிஷத்துக்களை உருப் போட்டுக்கொண் டிருப்பவரையும் பரிஹஸிக்கிறான். ஸுகத்தை விரும்புவோர் என்னை யல்லவோ ஆச்ரயிக்க வேண்டும்? ஸுகத்தைத் துறக்கும்படி ஆப்தர் உபதேஶிப்பரோ? காணக்

கூடாததாக ஒப்புக்கொள்ளும் ஒரு பொருளைக் காணவேண்டுமென்று கட்டளை யிடுபவர் எப்படி ஆப்த ராவர்? 'க்ஷுத்ரஸ்யோ த்ருஷ்வத்:' என்பரோ? என்னுடைய போக்ய வஸ்துக்களெல்லாம் கண்களைப் பறிப்பதாய் மனோஹரமா யிருக்கும். 'சோவாஸம்ஹ க்ஷவித உநவா ஹவதா'—நீ எத்தனை தடவை நம் தகப்பனை விஷய இன்பங்களை வெறுக்கும்படி செய்ய ப்ரயத்நப்பட்டு வீணாகப் போயிற்று! அநாதி காலமாய் உன் ப்ரயத்நங்கள் ஒன்றும் பலிக் காமல் வீணாகவேதான் போகின்றன. 'ஹெ க்ரவண—பேதை விவேகா! மோஹ வீரனை என்னால் மூன்று உலகங்களிலுமுள்ள அநாதி காலமான வ்யவஸ்தைகள் அழித்துவரப்பட வில்லையா? அப்படி அழிக்கும் ரஸத்தில் நான் மூழ்கியிருக்கிறேன். என் ப்ரயத்நங்கள் என்றைக்கும் வீண் போக வில்லையே! எல்லாவற்றையும் விபரீதமாகத் தோற்றும்படி செய்யும் 'ப்ரமம்' எனக்கு ப்ராண மித்ரனாகக் கைகொடுத்து வருகிறது. உலகத்தில் பரவியுள்ள வேத மரக்கிளை முறித் தழித்துவிடும் மத்த கஜ லீலையில் நான் சண்ட ப்ரசண்ட னல்லவா? உனக்கும் எனக்கும் அநாதி காலமாய்ப் பகை யல்லவா? என்றைக்காவது நீ ஜயத்ததுண்டா? சொல்.

நாரதர்:—மஹாராஜரே! உம்முடைய வீர யசஸ்ஸுகளை யார்தான் கண்டிரார்? கேட்டிரார்? உலகம் படைத்த நாள் முதல் உம்முடைய பராக் ரமம் லோக ப்ரஸித்தம். நீர் தோலாத தனிவீரர். ஜீவர்கள் தங்களையே அறியாமற்படி தேஹம் முதலிய தன்மையை ப்ரமித்து அந்த மோஹத்திலேயே மூழ்கியிருக்கும்படி செய்யும் உமது பராக்ரமத்தை என்னென்று சொல்வது?

[இதன்பேரில் மோஹன் ஒன்றுக்கொன்று ஒட்டாத அஸங்கதப் பேத்த லான ஒரு ச்லோகத்தைப் பாடுகிறான். அதைக் கேட்டதும் நாரதர் சிரித்துக் கொண்டு, "இவனுக்கு மரண ஜன்னி போன்ற தசை வந்து ஜாத்கவாதி வாக்யங்கள் போன்ற பேத்தல்களைப் பேத்துகிறான். கேடு வந்து அழியப் போகும் ஸமயத்திலும் துர்மதியைத் தழுவிக்கொண்டு ச்ருங்காரப் பேத்தல் களைப் பேசுகிறான்" என்று சொல்லி, "மஹா மோஹ மஹாராஜரே! இதோ ஸூர்ய பகவான் மேல்ஸமுத்ரத்தில் தம் ஸாயம் ஸந்த்யாவந்தந நியமத்தை அநுஷ்டிப்பதற்காக ஆகாயத்திலிருந்து இறங்குகிறார். நானும் அந்த நியமத்தை அநுஷ்டிக்கச் செல்கிறேன்." [ஸூர்யதேவர் தம்முள் உள்ள பரமாத்மாவான நாராயணனை ஸாவித்ரியால் தொழுவதற்கு ஆகாயத்தில் உதிக்கிறார். அவர் முதலில் எழுந்திருந்து நமக்கும் அவ்வழியைக் காட்டுகிறார். அவர் எழுகையில் நாமும் அவரோடு கூட எழுந்து, அவரோடு கூடவே ஸந்த்யாவந்தநத்தை அநுஷ்டிக்கவேண்டும். ஸாவித்ரீ மாதரம், 'ஸவிதா' என்ற பெயரையுடைய ஸூர்ய தேவனை உபாஸிக்கும் மந்த்ர மல்ல; அவருக்குள் அந்தர்யாமியாயும், உலகத்திற்கே 'ஸவிதா' என்னும் பிதாவும் ஸ்ரஷ்டாவுமான நாராயணனை ஸூர்ய தேவனும் உபாஸிக்கும் மந்த்ரம் என்று நாரதர் இதனால் விளக்குகிறார். ஜகத் ஸவிதாவைத் தொழும் மந்த்ரம் ஸாவித்ரீ.]

[நாரதர் புறப்பட்டுப் போய்விட்டார்.]

மஹாமோஹன்:—ஸாயம் ஸந்த்யா காலம் நமக்கு ஸந்தானத்தைப் பெருக்கும் ஸம்போக ச்ருங்காரங்களை ஆரம்பிக்கத்தக்க காலமாகும். இக்காலத்திற்குப் 'பித்ரு ப்ரஸூ:' [பித்ருக்களைப் பிறப்பிக்கும் ஸமயம்] என்று பெயர். பித்ருக்கள் வந்து பிள்ளைகளின் வயிற்றில் பிறக்கிறார்கள். அஸ்தமன ஸமயத்தை வைதிகர்கள் ஸதாசாராநுஷ்டான ஸமய மென்றும், திருடர்கள் திருட்டுக்கு அநுகூலமான இருட்டின் ஆரம்ப மென்றும், காமிகள் ஸ்த்ரீ ஸம்போக ஆரம்ப கால மென்றும் நினைப்ப ரென்பர். மஹாமோஹன் இப்படி நினைக்கிறான். [இரண்டு அழகிய ச்லோகங்களால் மஹாமோஹன் பகல் வெளிச்சம் மறைவதையும், இருட்டுப் பரவுவதையும் வர்ணிக்கிறான். தமோமயனான மஹாமோஹனுக்குத் தமஸ்ஸு மிக ப்ரியமானது.]

துர்மதி:—பலிஷ்டரான விவேகன் முதலிய ஶத்ருக்களோடு யுத்தம் தொடங்கும் ஸமயத்தில் ஸம்போக காலத்தை நீங்கள் வர்ணிப்பது பொருத்தமாகுமா? ஶத்ருக்களிடம் அவ்வளவு அலக்ஷ்யத்தால் இப்படிப் பேசுகிறீர்களா?

மஹாமோஹன்:—

"வஶ்யஸ்திஷ்டதி ஷட்விதம் மம பலம் மாயாவிநஸ்ஸைநிகா:
ராஜா ஹந்த மஹாநஹம் முநிஜநோந்மாதநோ ந: ப்ரபு: ।
ஸூக்ஷ்மாம் ஸ்வாந்தஸரோருஹே நிவஸதோ யோகீஶ்வரா ஸாம்ப்ரதம்
ஸேதும் போகவிவேகவாரிதரணே ப்ராஜ்ஞாந்தேவோ வதந் ॥"

எனது ஆறு விதமான படைகளும் என் வசத்தில் நிற்கின்றன; எனது ஸேனையாட்கள் மயன், ஶம்பரன், மாரீசன் முதலியவர்களைப்போல் மாயாவிகள். அரசனாகிய நான் மோஹனே; முனிகள் மனத்தையும் கலக்கவல்லவன் நான். என்னை முறிக்கவல்லா ரில்லை. மற்றதெல்லாம் கிடக்கட்டும். காமக்கலை வல்லார் தீர்மானித்திருக்கும் காம தேவாராதநமான காம போகக் கலையை அநுஸரித்த போகம் விவேக ஸமுத்ரத்தை எளிதில் தாண்டுவிக்கும் கெட்டியான பாலமாகும்.

'கிமபரை: கிமிஹாந்ய தேவதே நாதி ருதே ந ச
த்வாமேவ ஶரணம் யாமி காமதந்த்ராயிதேவதாம் ॥'

ஏன் வேறொரு தேவதையைத் தேடிப் பூஜிக்கவேண்டும்? காமக் கலைக்கு முக்ய தேவதையாயிருக்கும் உன்னையே நான் ஶரணமாகப் பற்றுகிறேன். இன்று இரவு முழுவதும் நாம் ரதி கேளிக்கைகளில் ரமிப்போம். விடிந்தபிறகு நான் படைக்களத்திற்குப் போகிறேன். [வேணீ ஸம்ஹார நாடகத்தில் மோஹமயனான துர்யோதநன் இரண்டாவது அங்கத்தில் பாரத யுத்த நடுவில் தன் மனைவி பானுமதியின் வ்ரதத்தையும் குலைத்துப் போகத்தி லிறங்கியதாக வர்ணித்துள்ளதை ஸ்வாமி இங்கே நினைக்கிறார்.]

[தேவியோடுகூட மஹாமோஹன் உள்ளே போய்விட்டான். பிறகு ஆகாய விமானத்தில் வீணைக் கம்பியை மீட்டுவதில் விளங்கும் விரல்களோடு கூடிய நாரதரும் தும்புருவும் ப்ரவேஶிக்கிறார்கள்.]

நாரதர்:—மித்ரரே ! மூவுலகங்களுக்கும் இன்று நற்பொழுது விடிகிறது. இன்று ஸத்ய ஸங்கல்பராகிய விவேகர் மஹாமோஹனை ஜயிக்க முயற்சிக்கிறார். விவேகருடைய ஜயத்திற்கு நல்ல ஸூசநம் காண்கிறது.

“ உதம் வ ஸ்வயஉதயக்ஷோஹ்ரு தி
ஷூ வொய நம் ஷூவமு தஜொ விஜொ அ நழ !
விவெ திந ஷிர அரஹெஉஉஜூ தம்
தாயீஉயம் கிஉவி உஹொ விஜ்ரு ம்ஹதெ ॥ ”

ஸூர்யோதய காலம் இது. சீக்ரத்தில் மஹாமோஹனையும் அவன் படைகளான காம க்ரோதாதிகளையும் விவேகர் ஜயித்து ப்ரஹ்ம வித்யை வளர்ந்து ஜீவனை மோசநம் செய்யப் பகவத் ஸங்கல்ப ஸூர்யோதயம் வரப்போவதற்கு இது சுப ஸூசநம். வேதமே ஸூர்ய ப்ரபை. ஸூர்யன் வெளியிருட்டைப் போக்குகிறவர்; வேத ஞான ஸூர்யன் உள்ளிருளைப் போக்கி மோக்ஷம் தருவது. அநாதியான மாயைத் தூக்கத்திலிருந்து எழுப்பி ப்ரஹ்ம ஜ்ஞாந ஒளியைத் தருவது அந்த ஸூர்யன். இருட்டில் ஸ்தாவரம் ஜங்கமம் என்னும் ஸ்திர சரப் பொருள்களின் பேதம் தெரியாது. ‘ஸ்திரம்’ என்பது நித்யப்; ‘சரம்’ என்பது மாறி அழியும் அநித்யம். நித்யம் அநித்யம் என்னும் விவேகம் ஜ்ஞாந ஸூர்யனால் தான் கிடைக்கும். ‘ப்ரபோதம்’ (ஞானம்) ப்ரகாசிக்கப் போகிறது; அஜ்ஞாந விருள் நீங்கப்போகிறது; ‘காலையில் ரிக் மயமாயும், மத்யாந்ஹத்தில் யஜுர் மயமாயும், ஸாயங்காலத்தில் ஸாம மயமாயும் ஆதித்ய ஜோதிஸ் ப்ரகாஶிக்கிறது’ என்ற ச்ருதியை ‘தாயீஉயம்உஹ:’ என்பதால் ஸ்வாமி ஸூசிக்கிறார்.

தும்புரு :—பகவானே ! நம்மைப்போலவே ஸூர்ய பகவானும் இந்த மஹா யுத்தத்தைப் பார்க்க ஆவலுடன் கிளம்புகிறார்போலும்.

நாரதர் :—விவேகருடைய ஜயத்திற்கு நல்ல ஸூசகம். எங்கும் இருட்டுக் கலைந்து ஜ்யோதிஸ் பரவுகிறது. ராம ராவண யுத்தத்தை அநுபவித்த யுத்தக் காட்சி ரஸம் மறுபடி பஹு காலமாகக் கிடைக்கவில்லை. இன்று நமது பாக்யத்தால் கடும்போர்க் காட்சியின்பம் கிடைக்கப்போகிறது. [மனதிற்குள்ளே நடக்கும் நற்குணத் தீக்குணப் போரை நம் போன்றவர் தான் காணமுடியும்.] மஹா மோஹன் டம்பன் தர்ப்பன் முதலிய ராக்ஷஸர்கள், விவேகர் வ்யவஸாயர் முதலிய தைவ ஸம்பத்துடைய ஸத்வவான்களோடு கடும்போர் புரியப்போகிறார்கள். அநாதிகாலமாகப் பெருகிய வைரத்தோடு நடக்கும் யுத்தம் இது.

தும்புரு :—பகவானே ! யுத்தத்தில் வெற்றியும் தோல்வியும் ஒருவருக்கும் நிச்சய மில்லையென்பரே. தேவரீர் எப்படி நமக்கே ஜய மென்று உறுதி கூறலாம் ?

நாரதர் :—நான் சொல்வது ஒருபோதும் பொய்யாகாது. நீயே இதோ நேரில் பார்க்கப்போகிறுய். கையில் கங்கணத்தைப் பார்ப்பதற்குக் கண்ணுடி வேண்டுமா ? [கங்கண மென்பது ஜயித்தவர் தங்கள் ஜயத்திற்கு அடையாள மாகப் போட்டுக்கொள்ளும் வீர சங்கிலியையும், ஜயித்தவர் பரிசாக அடையும் தோடாவையும் ஸூசிக்கும். ஜயிக்கப்போகும் விவேகர் கையில் ஜய சங்கிலி வந்துவிட்டதே ! இதோ நமது கண்ணுக்குத் தெரிகிறதே.]

"கயஂதெ ந ஜயாஜியஂா கிஂவா ஸநுக்ஷஂஜெ ஷுயம் ।
உவ ஊணம் கிஜவெக்ஷ ஞ கஜஂணஸஂ நிரீக்ஷணெ ॥"

[ஸம்ஸ்க்ருத நாடக லக்ஷண க்ரந்தங்களில், யுத்தம் நடப்பதை நேரில் காட்சி யாகக் காட்டக்கூடா தென்று கூறியுள்ளது. உத்தராம சரித நாடகத்தில் லவனுக்கும் சந்த்ரகேதுவுக்கும் நடந்த யுத்தம், அந்த யுத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கந்தர்வர் ஸம்பாஷணையாகக் கூறப்பட்டது.] இங்கு தும்புரு நாரத ஸம்பாஷணை மூலமாக வர்ணநம். 'ஜஹா நயஂபஷு ஸஂவாதஃ' என்று இங்கே தும்புரு கூறுவது. 'ஹூவஜெ த சுஷுஸஂவாலெ த' என்கிற குரு பாண்டவ யுத்தத் தொடக்கத்தில் கீதை ஆரம்பித்துள்ள வர்ணநத்தை ஸூசிப்பது. மஹா பாரதப் போரிலும் பெரிய யுத்தம் இது. [தொடரும்]

---

ஸ்ரீ :

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்

### விரோதி ஞு. ஆடி (கடக) மீ. ஜுலை-ஆகஸ்ட்-49.

| | | | |
|---|---|---|---|
| 16—7—49 | 1வ | சனிக்கிழமை ... | சூந்ய திதி; கடக ரவி 7—43; தக்ஷிணாயந புண்ய காலம்; ஆடிப் பண்டிகை. |
| 17—7—49 | 2வ | ஞாயிறுக்கிழமை ... | சூந்ய திதி |
| 18—7—49 | 3வ | திங்கட்கிழமை ... | கடக க்ருஷ்ண அஷ்டமி திதி |
| 21—7—49 | 6வ | வியாழக்கிழமை ... | ஸர்வ ஏகாதசி |
| 25—7—49 | 10வ | திங்கட்கிழமை ... | ஸர்வ அமாவாஸ்யை |
| 26—7—49 | 11வ | செவ்வாய்க்கிழமை ... | ஸ்ரீ. அ. மடம் 36-ம் பட்டம் பரந்தூர் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம் |
| 29—7—49 | 14வ | வெள்ளிக்கிழமை ... | திருவாடிப்பூரம் |
| 30—7—49 | 15வ | சனிக்கிழமை ... | பஞ்சமி – ஷஷ்டி திதி த்வயம் |
| 2—8—49 | 18வ | செவ்வாய்க்கிழமை ... | பதினெட்டாம் பெருக்கு |
| 4—8—49 | 20வ | வியாழக்கிழமை ... | ஏகாதசி திதி |
| 5—8—49 | 21வ | வெள்ளிக்கிழமை ... | ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி (வ்ரதம்) |
| 8—8—49 | 24வ | திங்கட்கிழமை ... | ருக் – யஜுருபாகர்மம் |
| 9—8—49 | 25வ | செவ்வாய்க்கிழமை ... | காயத்ரீ ஜபம் |
| 14—8—49 | 30வ | ஞாயிற்றுக்கிழமை ... | கடக க்ருஷ்ண ஷஷ்டி திதி |
| 15—8—49 | 31வ | திங்கட்கிழமை ... | கடக க்ருஷ்ண ஸப்தமி திதி |
| 16—8—49 | 32வ | செவ்வாய்க்கிழமை ... | சூந்ய திதி; விஷ்ணுபதி; ஸிம்ஹ ரவி 35–55. [இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்] |

---

189260

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

# மதுராலாபம்

[ஸ்ரீ. உப. கல்யாணபுரம் S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M. A. வித்வான், L. T. திருவையாறு]

வைகுண்ட ஏகாதசி கழிந்த மறுநாள் காலையில் வீட்டின் வெளிப்புறம் உட்கார்ந்தவண்ணம் யோசித்துக்கொண்டிருந்தேன். ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் ஸர்வேச்வரனது அதீநம் என்பதில் ஐயப்பாடு உண்டோ? திருமங்கையாழ்வாரும் அவரது உள்ளத்திற்கு உகந்த திவ்யதேசங்களும் மனத்திற் சுழன்றன. அன்று திருநறையூரில் தேவாதிதேவனது தெப்பத் திருவிழா பளிச்சென்று மனத்தில் தோன்றியது. உடனே ஓர் ஆருயிர் நண்பருடன் புறப்பட்டேன். 'ஶுபஸ்ய ஶீக்ரம்' என்றல்லவோ கட்டளை? கும்பகோணத்திலிருந்து இரண்டு மூன்று க்ரோசங்களில் திருநறையூர் இருக்கின்றது. நாச்சியார் கோவில் என்று இவ்வழகிய திருப்பதி ப்ரஸித்தி பெற்றிருக்கிறது. கும்பகோணம் ஸ்டேஷனைத் தாண்டி நாச்சியார்கோவில் ரஸ்தாவில் கால்வைத்தவுடனேயே மனத்தில் எல்லையற்ற இன்பச்சுவை உண்டாயது. 'நாச்சியார் கோவில் யாரய்யா நாச்சியார்கோவில்' என்று வண்டிக்காரன் கூப்பீடு போட்டதும் ஸர்வேச்வரன் நியமநமே என்று மகிழ்ந்தேன்.

திவ்யதேசங்களுக்குச் செல்லும் மார்க்கம் அர்ச்சிராதி என்று சொல்லத் தடையில்லை. மேல்வானில் அஸ்தமித்துக்கொண்டிருந்த செஞ்ஞாயிறு தன் செவ்விய கிரணங்களால் பரந்த வயல்வெளிகளின்மீது ஓர் செம்பொன்னிறத்தை அள்ளி வர்ஷித்துக்கொண்டிருந்தான். கலகலவென்றொலித்துப் பக்ஷி ஜாலங்கள் இங்கு மங்கும் நிலவின. காற்றில் ஓர் தட்பம் காணப்பெற்று, வெகு நேரம் புகை வண்டியில் இருந்த உடலுக்கு வெகு இன்பம் தோன்றிற்று. வண்டியும் புறப்பட்டது. வழியும் இனிமையாயிருந்தது.

இந்தத் திருப்பதியில் திருமங்கையாழ்வாருக்கு ஆராத காதல். பெரிய திருமொழியில் ஆறும் பத்தில் 70 பாட்டும், எழாம் பத்தில் 30 பாட்டும், ஆக நூறு பாசுரங்களும், ஒரு மடலும் அவ்வெம்பிரானுக்கு ஸமர்ப்பித்திருக்கிறார். திருநறையூர் என்று நினைக்கும்பொழுதே காதில் அமுததாரை பாய்வதுபோலிருக்கிறது. இந்த அழகிய ஊருக்கு எப்பொழுது போய்ச் சேரவேண்டுமென்று பரகாலன் கூறுகிறார் தெரியுமா? உடல் வளைந்து, தோல் திரைந்து, கண்கள் பஞ்சடைந்து, கைகள் கோல்பற்றித் தள்ளாடும் முதுமை வந்து நம்மைப் பற்ற, இளம் பெண்கள் இக்கோலங் கண்டு நகையா முன்னம் சென்று சேரவேண்டுமாம். அதாவது: 'யாக்கையும் இளமையும் சீரும் செல்வமும் நிலையா; திருநறையூர்த் தேவதேவனைச் சென்று அடையுங்கள்' என்கிறார். அவர் சொல்லும் வன்மையோ!

"வாளொண் கண்நல்லார் தாங்கள் மதனனென்றார் தம்மைக்
கேண்மின்கள் ஈளையோ டேங்கு கிழவ னென்னுதமுன்
வேள்வும் விழவும் வீதியிலென்று மறாதவூர்
நாளும் நறையூர் நாம்தொழுதும் எழுநெஞ்சமே!"

ஆஹா! வேள்வும் விழவும் வீதியில் என்றும் அறாத ஊராம் திருநறையூர்.

கதிரவன் மறையு முன்னமே பால் வெண்மதி, நிர்மல நீலவானில் ஓர் வெள்ளி வட்டம்போல் எழுந்தது. ஊர் நெருங்கிற்று. ஜில்லென்ற காற்று வெகு தூரத்திலிருந்து மலர்ந்த செவ்வந்தி மலரின் ம்ருதுவான பரிமளத்தை வீசிற்று. 'பாரையூரும் பாரந்தீரப் பார்த்தன்தன் தேரையூரும் தேவதேவன் சேருமூர்' அல்லவா அது? என்ன அழகு! எழுந்த நிறைமதி அப்பட்டினத்தின் மாடங்களுக்கு வெள்ளிய ஸுதை வர்ஷம் செய்ததுபோல் நிலவைப் பரப்பியது. மணிமுத்தா நதியெனும் அழகிய திருக்குளம் தெய்வ ஸரஸ்போல் விளங்கிற்று. எலெக்ட்ரிக் பல்ப்களும் எண்ணெய் விளக்குகளும் ஒன்றுசேர்ந்து வஜ்ர மாணிக்க ப்ரதீபங்களாகத் துலங்கின. ஸர்வேச்வரனது ஸ்வரூப ரூபங்களுடன் விபவமும் மனத்தை உருக்கிற தல்லவா? மேல் கரையில் அப்பன் எழுந்தருளினன். அவனது வலப்பங்கில் ஓர் நன்னெஞ்ச வன்னம் பிரியாது திகழ்ந்தனள். இருவரையும் ஒருங்கே கண்ட கண்கள் என்ன பாக்யம் செய்தனவோ? நம்பியும் நங்கையுமாக வீதியார வந்த திருக்கோலம், நம் ஆயுள்வரை மனத்தே சிந்தித்து மகிழவும், பின்னர் ப்ராண ப்ரயாண ஸமயே அந்திம ப்ரயாண ப்ரதிபையாய்த் திகழத்தக்க அத்புதமான காட்சி! பச்சை மரகதத் திருவபிஷேகம்; மாணிக்க வஜ்ர கசிதமான மகர நெடுங்குழை; பத்மராகங்களாலாய புலிநகப் பதக்கங்கள்; சிற்றிடையில் தவழும் வஜ்ர மேகலை; மெல்லிய வான்பட்டாடை; சிற்றடிமேல் திகழும் செம்பொன் சிலம்பு. இவ் வழகைப் பேசினர் பிறவி நீத்தார். நம்பியின் திருமுகமோ கண்டவர்தம் மனம் வழங்குந் திருமுகம். பெருமையும் இறைமையும் தாண்டவ மாடும் திருமுகம். தனிமையும் தண்ணளியும் கொந்தளிக்கும் திருமுகம். அடைந்தவரை அன்போடழைத்து அளவளாவுந் திருக்கண்கள். அருளே அலைமோதும் அமுதத் திருக்கண்கள். நல்ல சதைப்பற்றுள்ள அழகிய கபோலங்கள். கொவ்வைச் செவ்வாயில் குளிர்ந்த புன்சிரிப்பு. சிரிப்பென்றால் குறும்பு நிறைந்த சிரிப்பு. அடைந்தவரை ஆழமடுக்கும் சிரிப்பு. என்றும் நினைத்து நினைத்து உள்ளத்தே கொள்ளத்தக்க ஓர் குறச் சிரிப்பு. இவ்வடிவழகை உன்னி உருகாதார் யாரே? பக்கத்தில் பிராட்டி கற்பகத் தருவைச் சார்ந்த தெய்வக் கொடிபோல் நின்றாள். வந்தவரை வாழ்விக்கும் மங்கள தெய்வ மல்லவா அது? இவ்விருவரும் சேர்ந்த ஓர் அழகுதான் என்னே! நிலமாமகள், மலர் மாமங்கை, பிரமன், சிவன், வானவர், இவர்க்கெல்லாம் தெய்வமாகிய தேவ தேவ னல்லவா அவன்?

இனிய நிலவு உடலெல்லாம் தவழ இறைவன் மெல்ல நடந்து எழுந்தருளினன். வீதிகளோ புதுப்புனல் தெளிக்கப்பெற்று அழகிய கோல

மிடப்பெற்றுத் திகழ்ந்தன. மாடங்களின் பின்புறம் குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளைமுத்தும் தலையார்ந்த இளங்கமுகின் தடஞ்சோலை சூழ்ந்த ஓர் பேரழகு அவ்விரவிலும் புலப்பட்டது. நம்பி நின்ற திருவடிவும் உயர்வும் தோற்றமும் அவனது பரத்வத்தை உணர்த்தின. பிறையாரும் சடையனும் பிரமனும் முன் தொழுதேத்த இறையாகி நின்ற பெருமை அவனதல்லவா? அதிரும் வெடி முழக்கத்தில் — ஆரவாரிக்கும் வாத்ய கோஷத்தில் — ஆயர்பாடியில் அளைவெண்ணெ யுண்ட அண்ணல், மின்னொத்த நுணமருங்குல் மெல்லியலாம் நாச்சிருடன் தெப்ப மேறினன். பரந்து அலைமோதும் பணிமுக்தா நதி பட்டப்பகல்போல் காட்சி யளித்தது. மேலே அகளங்கமான ஆகாய வீதியில் சந்த்ரன் தனியரசு புரிந்து, தன் தண்ணிய கிரணங்களை வீசித் தெளித்தான். உலகெலாம் உய்யுமாறு நம்பி நங்கையுடன் தெப்பத்தில் பொன்னாசலில் அமர்ந்தான். வெளிப்புறம் திரு வீதிகளை நோக்கினல் அன்றிரவு என்ன ஆநந்தம்! மாடங்களும் கோபுரங்களும் மதிள்களும் வெள்ளி பூசப்பெற்றன போல் விளங்கின. திருக்கோயில் கோபுரமும், உள்ளே மணிமுற்றமும், படிக்கட்டுகளும், பார்ப்பவர் கண்களைக் கவர்ந்தன. நம்பியின் வடிவழகில் ஈடுபட்டுப் பண்டு ஓர் சோழவரசன் மணிமுடியையும் தன் உடைமை யாவற்றையும் அவன் திருவடிக் கீழிட்டுத் தொண்டு செய்தானும். சோழன் கட்டிய கோயிலோ மணிமாடக்கோயில். சோழன் ஸாமாந்யமானவனா?

"வெங்கண்மா களிறுந்தி விண்ணியேற்ற
விறல் மன்னர் திறலழிய வெம்மாவுய்த்த
செங்கணன் கோச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே!"

என்று பகைவரைச் செருக்களத்தில் திறலழியச் செய்தவன். மேலும் அவன் சைவனாயிருந்து பின்னர் நம்பியிடம் அன்பு பூண்டவன்.

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்தோளீசற்
கெழில்மாடம் எழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்கிறார். இச்சோழன் செய்த பணியையும் இவன் அன்பையுங் கண்ட ஆழ்வார், 'தண்சேறை எம்பெருமான் தாள்தொழுவார் என் தலைமேலாரே' என்ற கொள்கை யுடையவ ராகையால் 'அம்பரமும் பெருநிலனும்' என்னும் திருமொழியில் 'நம்பிக்குப் பாதி நரேந்த்ரனுக்குப் பாதி' என்று பாடல்களைப் பங்கிட்டுப் பாடியுள்ளார். ஆழ்வாருக்கு இத்திவ்ய தேசத்தில் எம்பெருமான் ஆசார்யனாய் ஶங்க சக்ரத் திருவிலச்சினையைப் பொறித்தாகவும், அதனால் தான் நான்கு கைக ளில்லாமலும், முன்னர் நீட்டிய கைகளில் திருவாழி திருச்சங்குகளுடனும் ஸேவை ஸாதிப்பதாகச் சொல்லுகிறார்கள். திருமங்கையாழ்வாருக்கு இவ்வெம்பெருமானிடம் மாளாத காதல். இவனிடம் அவர்

உள்ளங் குழைந்து கதறுகிறார். இந்த ஒரு தலத்தில் ஒரு ஆயிரம் மூர்த்திகளின் வடிவழகைக் காண்கிறார். ராமன் க்ருஷ்ணன் நரசிங்கன் திரிவிக்ரமன் வாமனன் முதலிய அவதாரங்களும், வேங்கடம் திருவாலி திருநாவாய் திருமெய்யம், குடந்தை, திருக்கோட்டியூர் கடன்மல்லை திருப்பிரிதி திருமூழிக்களம் திருநீர்மலை திருக்கோவலூர் திருத்தஞ்சை முதலிய திவ்ய தேசங்களும், ஆகிய இவற்றைத் திருநறையூர் நம்பி திருமேனியிற் காண்கிறார். இப்பெருமானை விடமுடியாதென்கிறார். உலகமெல்லாந் தன்னைப் பித்தனென்று பழித்தாலும் அவனை விடல் அரிதென்கிறார்.

> "அத்தா! அரியே! என்று உன்னை அழைக்கப்
> பித்தா! என்று பேசுகின்றார் பிறரென்னை
> முத்தே! மணி மாணிக்கமே! முளைக்கின்ற
> வித்தே! உன்னை எங்ஙனம் நான் விடுகேனே!"

திருநறையூர் நம்பியிடம் ஆழ்வார் கொண்ட அரிய அன்பை நினைத்து அகமகிழ்ந்து, சிற்றறிவுடைய, கல்மனத்தனைய அடியேனும் கண்ணீருதிர்த்து,

> "ஆயா! அலைநீ ருலகேழும் முன்னுண்ட
> வாயா! உன்னை எங்ஙனம் நான் மறக்கேனே"

என்று புலம்பிப் பெருந்துயர் பெருமகிழ்ச்சி இவற்றுடன் திரும்பினேன்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# * உபய வேதாந்த ஐககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

உயர்வென்பது, ப்ருஹத்தான தன்மையும் அத்தன்மையுடைய வஸ்துவுமாகும். விச்வத்தி லுள்ள பெருமைகளெல்லாவற்றிலும் பெரிதான ஸர்வாதிசாயி ப்ருஹத்தான ஸர்வ விதத்தாலும் நிரதிசய ப்ருஹத்தான தன்மையை 'உயர்வறவுயர்' என்பது சொல்லும். வேதாங்கமான வ்யாகரணம் தாது பாடத்தால் காட்டிய ப்ரஹ்ம சப்த வ்யுத்பத்தியை இந்த ஆநந்த ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா த்ராவிட மீமாம்ஸா சாஸ்த்ரத்தின் தொடக்கத்திலேயே தெளிவிப்பதால், முதலதிகரணத்தில் ஸித்தே வ்யுத்பத்தியை ஸாதிப்பதை ஸூசிக்கிறார். 'ப்ருஹ' என்னும் தாதுவிலிருந்து 'ப்ருஹதி' எல்லாவற்றிலும் உயர்த்தியாயுள்ளதென்கிற பொருள் கிடைக்கிறது. 'ப்ருஹி' என்கிற அஞ்சாதி தாதுவிலிருந்து 'ப்ருஹயதி' தன்னைப்போல் பெரியதான தன்மையை, அதாவது: எண்குணங்களையும் ஜ்ஞாநாநந்தங்களையும் ப்ரகாசிப்பித்து மிக்க

---

* ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி நம்முடைய வேதாந்தங்களில் தலஸ்ப்ருக்கான ஜ்ஞாநம் பெற்றவர். அவர் இம்மாதிரி ஒரு ஐக கண்ட்யம் எழுத முன் வந்தால், அது ஸர்வ விதத்திலும் க்ராஹ்யமென்று எண்ணி, அதை வெளியிட அங்கீகரிக்கிறோம். [ஸம்பாதகர்]

உயர்வாகச் செய்து ப்ரஹ்ம ரூபத்தோடு ஒரு புது ஆவிர்ப்பாவத்தை அதாவது: 'பிறந்தா ருயர்ந்தே' என்று இந்த ஶாஸ்த்ர முடிவில் பாடும் பரம ப்ரயோஜ நத்தைத் தருவதைக் குறிக்கிறது. ப்ரஹ்ம சப்தத்தின் இந்த வ்யுத்பத்திப் பொருளை அடுத்த அடியில் மிக உயர்ந்த மதிநலத்தை யருளுவதையும், பின் இரண்டடிகளால் 'துயரறு' என்று ஶோகத்தின் பாரமான அக்கரையைத் தாரணஞ் செய்வித்து, 'அயர்வறு மமரர்கள்' என்றிங்கே முதலில் பாடிய படியும், 'மாமணி மண்டபத்து அந்தமில் பேரின்பத் தடியரோ டிருந்தமை' என்றும், 'அவாவற்று வீடுபெற்ற' என்றும், 'அறிந்தார் பிறந்தா ருயர்ந்தே' என்றும், க்ரந்த முடிவில் பாடியபடிக்கும் ப்ரஹ்மம்போல் பெரியதாக்குகிற தையும் விளக்குகிறார். கோஶங்களிலிருந்து சப்தங்களின் பொருள்களை வ்யுத்பத்தி செய்துகொள்ளவேண்டிய க்ரமத்தை வேதாங்கமான யாஸ்க நிருக்த மென்னும் வேத கோஶத்தில் 'ப்ரஹ்ம பரிவ்ருடம் ஸர்வத:' என்று காட்டப்பட்ட ப்ரஹ்ம ஶப்த வ்யுத்பத்தியை 'உயர்வற வுயர்' என்று தொடக்கத்திலேயே தமிழ்செய்து காட்டுகிறார். வேதம் தமிழ் செய்வதுமன்றி வேதாங்கங்களையும் தமிழ் செய்கிறார். 'ஸர்வத:'—எல்லாவற்றைக்காட்டிலும் ப்ருஹத்துக்களான எல்லா உயர்வுகளைக் காட்டிலும் பரிவ்ருடம்—ஸர்வ ப்ரகாரங்களாலும் ப்ருஹத்தானது, உயர்ந்தது. யாஸ்கரும் 'ப்ருஹ, ப்ருஹி' என்கிற தாதுக்களைக்கொண்டே 'பரிவ்ருடம்' என்று 'ப்ருஹ' தாதுவிலிருந்து வந்த 'ப்ருட' சப்தத்தை ப்ரயோகித்தார். வ்யாகரணத்தில் 'த்ருட: ஸ்தூலபலயோ:', 'ப்ரபௌ பரிவ்ருட:' என்று இரண்டு தொடர்ந்த ஸூத்ரங்கள். 'த்ருஹ த்ருஹி வ்ருத்தௌ' என்கிற 'வ்ருத்திப்' பொருளையுடைய தாதுக்களிலிருந்து மிக்க பலமுடைய பலவானைச் சொல்லுவது 'த்ருட' என்னும் ஶப்தம். எல்லாவற்றுக்கும் மேலான ஸ்வதஸ்ஸித்தமான ஶக்தி, ஜ்ஞானம், பலம், க்ரியை, இவைகளையுடைய ப்ருஹ்மத்தை ஆழ்வார் இத்திருவாய்மொழியிலேயே 'திடரே' என்று ஏவகாரத்தோடு கூடிய ஸம்ஜ்ஞையாய்க் குறிப்பதும், இந்த ஸூத்ரங்களையும் தாது வ்யுத்பத்தியையும் காட்டும். 'பரிவ்ருட' ஶப்தத்தையும் ப்ருஹ்ம ஶப்தத்தையும் போன்றதே 'த்ருட' ஶப்தமும். 'பரிவ்ருட' ஶப்தத்திற்கு 'ப்ரபௌ' என்கிற பொருளைப் பாணிநி ஸூத்ரமே காட்டுகிறது. 'ப்ரபு: பரிவ்ருடோऽதிப:' என்று அமரகோஶம். இங்கே மூன்று மடியில் 'அதிபதி' சப்த முள்ளது. "ப்ரஹ்ம ஶப்த ப்ரவ்ருத்தி நிமித்தமான நிரதிஶய ப்ருஹத்வத்தை 'உயர்வற வுயர்நல முடையவன்' என்று முக்தகண்டமாக அருளிச்செய்தார்' என்று ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி. 'யவன்' என்பது ஆநந்த ப்ருகுவல்லீ முதலிய ச்ருதிகள் காட்டிய ப்ரஹ்ம ஶப்த வ்யுத்பத்தி ப்ரஸித்தியைக் காட்டுகிறது. பெற்றோர் ஆசிரியர் முதலிய குருக்கள், குழந்தைகளுக்கும் குழந்தைகள் போன்ற சிஷ்யர்களுக்கும் பொருள் தெரியாத ஶப்தங்களுக்குப் பொருளைத் தெளிவாக வுரைத்து க்ரியா ஶப்தமோ வஸ்து ஶப்தமோ எல்லா ஶப்தங்களுக்கும் அததன் பொருள்களுக்கு வாச்ய வாசக ஸம்பந்த முண்டென்பதைத் தெளிவிக்கும் முறையில், ப்ருகுவல்லியில் தகப்பனுரைப் பிள்ளை 'ப்ரஹ்மத்தை எனக்கு அறிவிக்கவேண்டும்' என்று கேட்டு, அவர், 'எது ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி ஸ்திதி லயம் மோக்ஷ

மென்னும் ஆத்யந்திக லயமான ப்ரஹ்மத்திற்குள் அபிஸம்வேஶ மென்னும் நித்யமான பிரியாத ஸமாந இன்பமான இருப்பையும் அருளுகிறதோ, ஆநந்த மென்னும் அந்த வஸ்துதான் ப்ரஹ்மம்' என்று அருளும் ச்ருதி வாக்யத்திலும், 'எது இதற்குமேல் பெரியது? எது இதற்குமேல் பெரியது?' என்று மேலே மேலே ஶிஷ்யரான நாரதர் ஸநத்குமார குருவைக் கேட்டுக் கேட்டுக் கடைசியில் ஆசிரியரான ஸநத்குமாரர், 'ஸத்ய மென்றும் ஆத்மா வென்றும் பூமா வென்றும் பெயரையுடைய எல்லையற்ற ஸுகமான ஸர்வ ஜகத்காரணமான வஸ்து தான் பூமா வென்னும் விச்வத்தின் உயிர்' என்று தெளிவிப்பதையும், ஆநந்த வல்லீ என்னும் பரம வாத்ஸல்யமுடைய தாய் தந்தை ஆசிரியர் போன்ற உபநிஷத்து ஆநந்த ப்ரஹ்ம மீமாம்ஸை செய்து, முடிவில் ப்ரஹ்மத்தின் ஆநந்தம் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாமல் அளவற்றதென்று நிஷ்கர்ஷ முரைப்பதையும், அவை ச்ருதி ப்ரஸித்தமான 'ப்ரஹ்ம' 'பூமா' 'ஆத்மா' முதலிய ஶப்தங்களின் வ்யுத்பத்திப் பொருள்கள் என்பதையும், ப்ரஹ்மத்திற்குக் கூறப்பட்ட லக்ஷண வாக்யங்களால் ஏற்பட்ட ப்ரஹ்மத்தின் நிரதிஶய ப்ருஹத்வத்தையும், எல்லையற்ற ஆநந்தமுடைமையையும் காட்டும் ச்ருதி ப்ரஸித்தியையும் 'யவன்' என்று அநுவாதம் செய்து அவனையே பற்றியதான தம்முடைய த்ராவிட ப்ரஹ்ம மீமாம்ஸையும், மேல் மேல் பெருகும் ஆநந்த ப்ரஹ்மாநுபவ ஶாஸ்த்ரமுமான இப்ரபந்தத்தை ஜிஜ்ஞாஸாதிகரணத் தொடக்க ரீதியிலேயே குரு ஜனங்கள் ப்ரஹ்ம பூமா ஆத்மா முதலிய ஸித்த ப்ரஹ்ம வாசக ஶப்தங்களின் வ்யுத்பத்தியைத் தெளிவிக்கும் ப்ருகுவல்லி பூமவித்யா முதலிய ச்ருதிகளை ஸூசித்துக்கொண்டு தொடங்குகிறார் என்கிற ரஸம் இன்புறத்தக்கது. இந்த முதலடியில் 'உயர்வற வுயர்' என்று எல்லையற்ற உயர்வைக் கூறும் 1. ப்ரஹ்ம, 2. உத், 3. உத்தம, 4. பரமாத்மா, 5. பராத்பர, 6. பராவர, 7. பர, 8. பூமா முதலிய ஶப்தங்களின் பொருளையும் ப்ரஹ்ம பர்யாயமான அந்த ஶப்தங்களையும், 'நல' மென்று, 'ஆநந்தோ ப்ரஹ்ம' என்கிற ச்ருதி உரைத்தபடி ப்ரஹ்மத்திற்குப் பெயராக வந்த ஆநந்த ஶப்தத்தையும், அதன் பொருளையும், 'உடையவன்' என்பதால் ஸாமாந்யமாக எல்லா சேதநாசேதநப் பொருள்களுக்கு முடையவனான 'ஶேஷீ' என்பதையும், 'நலமுடையவன்' என்பதால் 'ஆநந்தமய' ஶப்தத்தையும், அதன் பொருளையும், 'யவன்' 'அவன்' என்று ஸர்வ நாம ஶப்தங்களை உபயோகிப்பதால், 'கஃ கிம் யத்தத் பதமநுத்தமம்' என்று ஸஹஸ்ரநாம ப்ரஸித்தமான விஷ்ணு ப்ரஹ்ம வாசக ஶப்தங்களையும், 'உயர்வற வுயர்' என்பதால் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்கிற ச்ருதிலக்ஷண வாக்யத்தில் பகவானிடத்தில் 'அநந்த' ஶப்தம் ரூடம் என்பதையும் ஸூசிக்கும் ஸித்த வ்யுத்பத்தி ஜடிலமான மாறன் விளக்க முறை ரஸிக்கத்தக்கது. [தொடரும்]

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

## ஸ்ரீமான் P. S. நாராயண ஐயரவர்களின் ஸுக்ருத பரிபாக விசேஷம்.

[சென்ற மாஸத்து ஸஞ்சிகையில், நாம் ஒரு ஸுக்ருதியைப்பற்றி ச்லாகித்துச் சில வார்த்தைகளை எழுதி யிருந்தோம். அந்த விஷயம் நமக்குக் கர்ணாகர்ணிகமாக எட்டிற் றென்றும், ஆகையால் அதன் உண்மையைப் பற்றி நாம் நிஷ்க்ருஷ்டமாக ஒன்றும் சொல்ல முடியா தென்றும் அதில் குறிப்பிட்டிருந்தோம். அதன் உண்மை இப்போது வெளிவந்து விட்டது. அதன் விவரம் வருமாறு :—ஸம்பாதகர்]

காஞ்சீ மண்டலத்தைச் சார்ந்த ஒரு மஹான், பாலக்காட்டுக்கு அருகிலுள்ள பள்ளிப்புரம் என்னும் அக்ரஹாரத்தில் வஸிக்கும்படி நேர்ந்தது. அவர்களது ஸந்ததியில் சாமுபட்டர் என்ற வேங்கட ஸுப்ரம்ஹண்யம் என்பவர் தோன்றிச் சிறந்த புகழோடு வாழ்ந்து வரலானர். அவரது தவப்புதல்வராக ஸ்ரீமான் P. S. நாராயண ஐயர் என்பவர், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்கிறபடியே கர்ப்ப ச்ரீமானாய் அவதரித்து, சிறந்த கல்வி பயின்று, உயர்ந்த பதவிகள் வஹித்து, தனக்கென வாழாப் பிறர்க் குரியாளராய், உதார குண ஶீலராய், அஷ்டைச்வர்யமும் நிரம்பப்பெற்றவராய் வாழ்ந்து வருகிறார். அன்னார், தென்னிந்தியாவின் திலகமென விளங்கும் குருவாயூர் என்கிற திவ்ய ஸ்தலத்தில் அதிக அபிநிவேஶ முடையவர். இவர் தமது ஸொந்த க்ராமத்தில் சுமார் 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திருததேர் கைங்கர்யத்தை ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணன் ஸந்நிதியில் செய்துள்ளார். ஷை ஸந்நிதியில் வர்ஷந்தோறும் இவர் லக்ஷார்ச்சனை நடத்தியும் வருகிறார். இவரது குடும்பத்தில் நாளைக்கும் ஐந்து க்ஷேத்ரங்களுக்குக் குறையாமல் ஸாளக்ராமம் திருவாராதநத்தில் இருந்து வருகிறது.

இவரது அதீநத்தில் ஓடுகள் கற்கள் செய்யும் கம்பெனி ஒன்று நடைபெற்று வருகிறது. பாலக்காட்டின் ஸமீபத்தில், இவருக்கு ஸொந்தமான சுமார் 15-மைல் விஸ்தீர்ணமுள்ள ஒரு காடு உண்டு. அதில் சில யானைகள் இவருடைய பராமர்ஶிப்பில் இருந்துவருகின்றன. தவிர: சென்னையில் தற்போது 'ஜெனரல் பாங்க்' என்பதை ஸ்தாபித்து, அதற்குத் தாமே நிர்வாஹியாயிருந்து, அதைத் தம் செல்வக் குமாரர்களான 'வேங்கட ஸுப்ரம்ஹண்யன்' 'க்ருஷ்ணன்' என்பவர்களது அதீநத்தில் மிக்க திறமையோடு நடத்திவருகிறார்.

இவர் வைதிக ச்ரத்தை நிரம்பிய ஒரு மஹான். ஸஹஸ்ர போஜநம் இது வரை தம் ஊரில் இவர் இருமுறை நடத்தியுள்ளார். இவரது ஸந்ததியார் ஸ்ரீ

அஹோபில மடத்து சிஷ்ய வர்க்கத்தினர். இவர் வர்ஷந்தோறும் தமது ஸொந்த ஊரில் கார்த்திகை மாஸத்தில் ஒரு மண்டலம் ப்ராஹ்மணர்களைக் கொண்டு வேத பாராயணம் லக்ஷார்ச்சனை ததீயாராதநம், இவைகளைத் தம் ஸொந்த செலவிலே நடத்திவருகிறார். இக்கைங்கர்யம் சுமார் ஐந்து தலைமுறையாக இவர்களது குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. இதன் சாச்வத நிதிக்காக லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள ஸொத்தை இவர் ஒதுக்கிவைத்திருக்கிறார்; பாடசாலைக்காகத் தம் க்ராமத்தில் ஒரு தனித் திருமாளிகையையும் ஒதுக்கியுள்ளார். இவரது ஔதார்ய குணத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. இவருக்கு 72 திருநக்ஷத்ரங்கள் நிரம்பியிருந்தும், ஆசார்ய ஸமாச்ரயணம் இல்லாத குறை ஒன்று இருந்தது. சென்ற 13—4—49-ல் இவர் தம் குமாரரோடு, ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருவடிகளை ஆச்ரயிக்கத் திருவெவ்வுளூர் சென்றார். ஸ்ரீ அழகிய சிங்கர் இவரைக் குளிரக் கடாக்ஷித்து, இவருக்கு 15-4-49 அன்று பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தருளினார். ஸ்ரீ அழகிய சிங்கர் அநுக்ரஹமும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் கடாக்ஷமும் இவரிடம் பூர்ணமாகப் பலிதமாயின. அன்று காலை இவர் ததீயாராதநமும், ராத்ரி டோலோத்ஸவமும் அதிவிமர்சையாக நடத்திவைத்து, ஆசார்ய க்ருபைக்குப் பாத்ரபூதரானார். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருமஞ்ஜநம் திருவாராதநம் முதலியவைகளை ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனப்படி பரிபூர்த்தியாக ஸேவித்து க்ருதார்த்தரானார். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஆராதித்து, ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவித்துக்கொண்டு இவர் ஊருக்குத் திரும்பும்போது, ஸ்ரீ அழகியசிங்கர் இவரைச் சீக்ரம் ப்ரபத்தி செய்துகொள்ள வருமாறு நியமித்தருளினார்.

என்னே ஆசார்ய கடாக்ஷம் பலித்தபடி! இரும்பைப் பொன்னாக்குவாரைப் போல, ஸம்ஸாரி சேதநனை உஜ்ஜீவிக்கச் செய்வது ஆசார்யனேயன்றோ? இந்த மஹான் முற்பிறப்பில் மஹத்தான புண்யம் செய்திருக்க வேண்டும். எல்லோருக்கும் இந்த பாக்யம் கிடைத்துவிடுமா? இந்த ஆராதநத்தால் ப்ரீதனான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், இந்த நாராயணையர் அவர்களுக்கும், அவரது ஸம்பந்தம் பெற்றவர்களுக்கும் உத்தமமான ச்ரேயஸ்ஸை அநுக்ரஹிப்பன் என்பதில் ஆக்ஷேபமில்லை. வேத முள்ளளவும் வேத கீத முள்ளளவும், காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் இவரது புகழ் அழியாமல், ஸ்ரீ அஹோபில மடத்திலும் பலவித கைங்கர்யங்களைச் செய்துகொண்டு, இவர் பல்லாண்டு பல்லாண்டாக வாழ ஸ்ரீ அழகிய சிங்கர் அநுக்ரஹிக்க வேணும்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

20 கரணத்ராணதக்ஷேண ஸங்கீர்ணேன ஸஹஸாமரம் ।
ஶேஷம் ஸத்த்வம் ஸமாதேவ ஸத்த்வம் ஸத்த்வம் தாரயதி ப்ரபோ ॥

21 ககாரரூபவாக்யஸ்தம் ஸாத்த்விகே ப்ராணவே யதா ।
ராஜஸே வர்த்ததே பாயாத் ஸாத்த்விகே ச ததா ப்ரபோ ॥

22 விதாதா ஶாஸ்தா ததா த்ராதா லோகஸ்ய பந்துரேவ ச ।
ஶுத்தஸத்த்வ ஸர்வேஷ்டலோகானாம் ஸர்வஸித்திம் ददाति யே ॥

23 யதா விசுத்தத்தாத்மா ஸாதி ஜக்ஷே ஜக்ஷாமயே ।
ததைவ ஸாதி தே பக்ஷஸ்ய மிஶ்ரம் கமலாலயா ॥

24 ஸ்ரேஷ்டம் ஸாரணே யாத்ர ஸாராஸ்யாம் ஜகதாம் விபோ ।
ப்ரகாஶ பாலனம் கர்த்தும் ப்ராப்ய த்வம் பக்ஷ லோகஸே ॥

25 பதேவி பரே திஷ்டந் ஸ்ரீஸத்ஸிம்ஹிதோ ஸதா ।
ஜகதாம் பாண்ட்யாகேந ஸ்ரேஷ்டா அக்ஷமா தரக்ஷா

26 ஸ்ரீநிதிம் ஜகதாமீஶம் த்வாம் ப்ரபத்யாவிஶா ஜநா: ।
ஸாஸ்த்ரநிஷ்டாம் ஸுஸம்ப்ராப்ய ஸம்ப்ரஸ்ரேஷ்டா ஸவந்தி ச ॥

27 ஏவம் ஸ்துத்வா ஸ்ரீநிவாஸம் ஸம்ப்ராப்ய தச நம்ரஸ்ஸம் ।
கவாந்தரோஸ சிவராதம் ஜநாத்ரே பந்துயோத்தம: ॥

28 கவந்ஸஸ்ய ப்ரேஷா லேச்சஷா தயம் பண்டகே நாரத: ।
ஸந்ஸர்ரூணஸமாயந்த்ர: ப்ரதஸ்தேமஹோபிலம் ப்ரதி ॥

29 நதீ நகா நாவியா: பண்யா பநாநி நகராணி ச ।
அதீத்ய ப்ராகய்யள யீனோ நகம் ககம்ப நாமகம் ॥

30 யத்ர ப்ரவதி லோ த்ரம்கா ஹிவரா லவநாஸிநீ ।
நதீ நிமஜ்ஜதாம் பாபா ந்யாஸந் ஷுந்தீ ஸர்வதீக்ஷுரா ॥

31 நிவஸந்தி முதா யத்ர முக்தயோ நவஸம்வத்யா ।
லக்ஷ்மீந்ருஸிம்ஹபூர்வா ஹரீணாம் லோகமங்கலே ॥

32 யத்ர பஹ்வா ச ஸம்ஸர்ப்ப ப்ரத்யஹம் ஸமம்வதத்ய ச ।
ப்ராணத்ய லக்ஷ்மீ ந்ருஹரி ப்ரூமவாம் ஸர்வதோ முதா ॥

33 यत्र देवाश्च दैत्याश्च परस्परसमागताः ।
कान्तमोहनशालायां स्थाः प्रणमन्ति चन्द्रा हरीन्द्र ॥

34 यत्र सिंहा गजा व्याघ्राः शरभा गण्डकादयः सङ्गताः ।
वैरं त्यक्त्वा मिथः नरहरिं प्रसन्ना नमन्ति च ॥

35 तं गिरिं प्रतिपद्यन्ते स्नात्वा नद्यां सहायशाः ।
सर्वस्य संयाकरणि प्रतद्य हरिं अपिरघ ॥

36 गत्वा चैनं सेवेऽपि वैष्णवाः प्रसरा स्थला ।
चन्द्रज्ञ्य यज्यासवेंद्रश्रेष्ठारं दिव्यवासयाः ॥

37 विष्णोरायतनं प्राप्य श्रीवासपत्यपेवरे ।
स्थिते नरसिंहरूपधीरः स्थाः प्रणम्य च यथाविधि ॥

38 तत्र ते तत्र तेजस्वी त्रिपुण्ड्रीयज्ञसूत्रवान् ।
शिखी काषायसंवीतकटिराजान्नबाहकः ॥

39 विशालवक्षाः पद्माक्षा रूयस्व वक्त्रस्तोत्रयन्तः ।
योगी ज्ञाननिधिः साक्षाद्द्वितीय इव भास्करः ॥

40 प्रवेश्याय सत्रायान्ते स्ववेदयोगिनं तमन्ताम् ।
वयनेनं हि पश्यन्सु सस्वरोक्त्या माहाष्ट्यकरनोन्मनिधि ॥

41 इति व्यवस्य स्वैयुष्मन् योगी हास्कवहस्निहः ।
बहाषे श्रीनिवासाय उं देव गम्भीरया गिरा ॥

42 भो भो श्रीवासवयत्वं चो ज्ञानं शिवसा वह ।
प्रिशारि लोककरक्षाये भवते तन्यद्मास्मृत ॥

43 सम्प्रतं त्वं तया भक्त्या संरक्ष हत्वी मानवान् ।
वं अवसं स्कारकरणा न्दं कारणा चत्वरेशतः ॥

44 इत्युक्त्वा नरहरि यैराभिरवी प्रेषणन्तं तदा ।
उपदिश्य च सन्न्यासं कारयित्वा यथाविधि ॥

45 दत्वा त्रिपुण्ड्रकाषाये शिरसिति नाम च ।
कृत्वा दानेमादसंयत्त्स्स्नेहशलनदशवसि ॥

46 वन्दनासश्व योगी तं देवाश्यगतान्त च ।
नरसिंहच्छत्रिस्वेतासन्ध्रहापेणे कां त्वं दद्यै वे ॥

47 सतदेवाश्यगते स्वेतेषु द्विसदाविषु ।
परिष्ठेषु कतिदि द्वाग राजाय सन्दर ॥

ஸ்ரீ:

# செய்திகள்

## ஸ்ரீ ஸ்வர்ணம் ஸ்வாமியின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நம் தேசத்தில் ஜ்ஞாநம் அநுஷ்டாநம் வைராக்யம் முதலிய ஸதாசார்ய குணங்களினால் விக்யாதராயெழுந்தருளியிருந்த ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீ ஸ்வர்ணம் ஸ்வாமியினுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம், ஸ்ரீரங்கம் வடக்கு உள் திருவீதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் தேசிக தர்சந ஜயத்வஜர் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி திருமாளிகையில், நிகழும் விரோதி ஸ்ரீ வைகாசி மீ.9உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாதி ஸகல கல்யாண குணலங்க்ருதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநத்தை அநுஸரித்து ஆரம்பிக்கப்பட்டு, வைகாசிமீ 11உ ரேவதீ நக்ஷத்ரத்தில் முடிவு பெற்றது. ஷை மூன்று தினங்களிலும் ஸ்ரீரங்க க்ஷேத்ர வாஸிகளான ஸகல வைதிக ஸ்ரீ வைஷ்ணவர்களால், வேதபாராயணம், திவ்ய ப்ரபந்தாத்யயநம், ஸ்ரீமத்ராமாயண பாரத பாகவதாதி க்ரந்த பாராயணங்கள், ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்த சதுஷ்டய பாராயணங்கள்—ஆகிய இவை அநுஷ்டிக்கப்பட்டன. 11உ ரேவதி நக்ஷத்ரத்தில் த்வாதசியன்று காலையில் ஷை வேதபாராயணாதிகளுடைய சாத்துமறையும், பெரிய பெருமாள் தொடங்கி ஆசார்ய ஸம்பாவனையும், பாராயணம் செய்தருளின பரமைகாந்திகளான, ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனையோடு விசேஷ பக்ஷ்ய போஜ்ய வர்க்கங்களோடு ததீயாராதநமும் பண்ணப்பட்டது. ஷை ததீயாராதநத்தில் பாராயணம் செய்தருளின ஸ்வாமிகளும், மற்றும் அநேக பாகவதர்களும், ஆசார்ய பக்தைகளான அநேகம் வயோதிக ஸ்த்ரீகளும் அந்வயித்திருந்தார்கள். ஷை தினத்தில் ஸாயங்காலம், ஸ்ரீ தேசிக தர்சந ஜயத்வஜர் ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் ஷை ஸ்ரீ. உ.வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் "ஆசார்யோபகாரம்" என்கிற விஷயம் மிகவும் அழகாக உபந்யஸிக்கப்பட்டது. அத்யாச்சர்யமான அவ்விஷயங்களைக் கேட்டு எல்லோரும் அதிகமான ஸந்தோஷ பரவசரானார்கள்.

இப்படி இத் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் பலபடியாக விசேஷ நிர்ப்பந்தமுள்ள ஸமயத்தில், விஸ்தாரமாய்த் ததீயாராதந பர்யந்தமாக நடந்ததற்குக் காரணம், ஸ்ரீ அழகிய சிங்கருடைய அநுக்ரஹத்தின் மஹிமையும், அதனால் ஸத்தை பெற்றிருக்குமவராய், 'ஶாலஸ்யேக்ஷிணோ ஸாஹஸ: நித்யம் ப்ராணோ பஹிஶ்சர:' என்கிறபடி விளங்கும் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யருடைய ஆசார்ய பக்தியும்தான் என்பது அடியோங்களுடைய அபிப்ராயம்.

ஸ்ரீ க்ருஷ்ண தாஸன்.

* * * *

## ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

[அத்யாபக—வேதபாராயண ஸமிதி]

தேரழுந்தூர் ஸ்ரீ ஆமருவியப்பன் ப்ரஹ்மோத்ஸவத்தில் 10—5—49 முதல் 18—5—49 வரை அத்யாபக—வேத பாராயணங்களுக்கு 32-திருநாமங்களை எழுந்தருளப்பண்ணி ஸமிதியார் மிகுதியும் உபசரித்தார்கள். அன்றியும், பல பண்டிதர்களைக்கொண்டு உபந்யாஸங்களையும் செய்வித்தார்கள். அவை வருமாறு:—

நிகழும் விரோதி ஸ்ரீ வைகாசி மீ 1உ (14-5-49) சனிக்கிழமை இரவு 10-மணிக்கு ஷை ஸமிதியின் சார்பில் ஸ்ரீ. வி. ஸ ஸபைப் போஷகரான ஸ்ரீமான் குழையூர் R. ஸூர்யநாராயண மூர்த்தி ஐயரவர்களுடைய தலைமையில், திருக்குடந்தை அக்நிஹோத்ரம் ஸ்ரீ. உ.வே. ராமாநுஜ தாதாசார்ய ஸ்வாமியால் "நமது மதமும் அதன் ஒற்றுமையும்"

என்பது பற்றி ஓர் உபந்யாஸம் நிகழ்த்தப்பட்டது. அதில் அந்த ஸ்வாமி பின் வரும் விஷயங்களை வற்புறுத்தினர். நமது நாடு அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் தேசிய வாழ்விலும் மேல்நாட்டாருடைய நாகரிகத்தைப் பின்பற்றிக் கீழடைந்துவிட்டதென்றும், அதை நிவர்த்திக்கப் பழம் பெருமையையும் பண்பாட்டையும் அநுஸரிக்க வேண்டுமென்றும், ஆத்ம வளர்ச்சிக்கான வழிகளில் ஈடுபடுவதே மானிட ஜந்மமெடுத்ததற்குப் பயனென்றும், ப்ராஹ்மணர்கள் தங்கள் கடமைகளை நன்குணர்ந்து, வேத மார்க்கத்தைக் கடைப்பிடித்து, லோக க்ஷேமத்துக்குப் பாடுபடுவதையே பரம ப்ரயோஜநமாகக் கொள்ளவேண்டுமென்றும், உலகில் உள்ள ஸர்வ ஜநங்களும் க்ஷேமமாயும் ஐகமத்யத்தோடு வாழ்வதற்கு நமது ப்ராஹ்மண மதம் பாடுபடுகிறதென்றும் விஸ்தாரமாக எடுத்துரைத்தார்.

மறுநாள் (வைகாசி ஸ்ரீ 2உ 15—5—49) ஞாயிற்றுக்கிழமை இரவு 7½-மணிக்கு ஸ்ரீ. உப. வேங்கடவரதாசார்ய ஸ்வாமி தலைமையில், கள்ளக்குரிச்சி ஸ்ரீ உப. T. A. தாதாசார்ய ஸ்வாமி B. A. B. L., (அட்வோகேட்) "ராமாயணாநுபவம்" என்னும் விஷயத்தை உபந்யஸித்தார். அதில், 'ஸ்ரீ தத்வம்', 'ஆசார்யர்களின் பெருமை' 'ராமநாம மஹிமை'- இவ்விஷயங்களைப் பற்றிப் பரக்கப் பேசி, ராமாயணம் வேத துல்ய மென்றும், வேதத்தில் உள்ளமாதிரி ராமாயணத்திலும் உதாத்தாதி ஸ்வரங்கள் உள்ளன வென்று விளக்கிக் காட்டினர். அக்ராஸநர் தமது பின்னுரையில் ஸ்வாமி ஸாதித்த விஷயங்களைச் சுருக்கமாக ச்ரோதாக்களுக்குத் தெரிவித்தார். கார்யதர்சியின் வந்தநோபசாரத்துடன் ஸதஸ் இரவு 9½-க்கு முடிவடைந்தது. ததீயாராதநத்துக்குப் பின்னர் அன்றிவு "வாமநாவதார வைபவம்" என்னும் விஷயத்தைப் பற்றியும், தொடர்ச்சியாக மற்றிரண்டு நாட்களிலும், கோமல் ராமாயண பூஷணம் ஸ்ரீ. உப. T. சேஷாத்ர்யாசார்ய ஸ்வாமி, முறையே "ஸ்ரீமத் ராமாயண ப்ரபாவம்" "குசேலோபாக்யாகம்" என்னும் உபந்யாஸங்கள் நடத்தினர். அவை அம்ருத வர்ஷங்களே. இதன் தொடர்ச்சியான இரண்டு தினங்களில், மதுரை அட்வொகெட் ஸ்ரீ. உப N. R. K. ஸ்வாமி, "கம்பரும் வால்மீகியும்" "கம்பர் கண்ட கைகேயீ" என்னும் இருவிஷயங்களையும் பற்றி மிக்க ரஞ்ஜகமாக உபந்யஸித்தார்.

பாராயண பூர்த்தி திநமாகிய 18–5–49–அன்று காலை, ஸ்ரீ. உப. கடாம்பி கோபாலையங்கார் ஸ்வாமி தலைமை வஹித்து, பாராயண ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனை செய்தருளினர். ஸ்ரீ. வி. ஸ. பாராயண வித்யார்த்திகளுக்கு கென்று ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்டிருந்த வஸ்த்ரங்கள் ஸ்ரீ அக்ராஸந ஸ்வாமியால் வித்யார்த்திகளுக்கு விநியோகிக்கப்பட்டன. பின்னர் ஸ்ரீ. N. R. K. ஸ்வாமி, ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளிலும் வேதத்திலும் தாம் கண்ட அரிய பெரிய விஷயங்களை ஸதஸ்யர்களுக்கு எடுத்துக் காட்டினர். பின்னர் தலைவர் உபந்யாஸகருடைய பெருமைகளைப் பரக்கப் பேசி, "ஆசார்ய மஹிமா" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தார். இரவு 11–மணிக்கு ஸதஸ் இனிது முடிந்தது.

| | |
|---|---|
| கடாம்பி. நரஸிம்மாசார்யர், | T. A. க்ருஷ்ணமாசார்யர், |
| கார்யதர்சி | கார்யதர்சி |
| ஸ்ரீ. வி. ஸ. ஸபை, தேரழுந்தூர். | ஸ்ரீ அ. வே. ஸமிதி, தேரழுந்தூர். |

* * * *

## திருக்குடந்தை ஆராவமுதன் உத்ஸவத்தில் ஆலயப்ரவேச கோலாஹலம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆனிஸ்ரீ ஸஞ்சிகையில் "தேவாலயங்களும் வைதிகர்களும்" என்ற தலைப்பில் ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி எழுதியுள்ளதை நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயம் கவனிக்கவேணும். நம் ஸம்ப்ரதாயத்திலுள்ள எல்லா ஆசார்யர்களும் ஆலய ப்ர

வேசமான கோவில்களுக்குப் போகாமல் சாஸ்த்ர விதிகளுக்குப் பயந்தே விலகியிருக்கிறார்கள். இப்படியிருக்க, அந்தந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சிலர், ஆசார்ய நியமநமின்றியும் ஆசார்யன் திருவுள்ளத்திற்கு எதிராகவும் ஆலய ப்ரவேசமான கோவில்களுக்குப் போவதைப்பற்றி ஸம்பாதகரின் குறிப்பில் வருத்தம் காட்டப்பட்டிருக்கிறது. அந்த வ்யக்திகள்மீது அந்தந்த ஆசார்யர்கள் ஒருவித நிக்ரஹத்தைக் காட்டுவது ஆவச்யக மென்றும் இந்தக் குறிப்பு கூறுகிறது.

இந்த ஸந்தர்ப்பத்தில் திருக்குடந்தை ஆராவமுதன் சைத்ரோத்ஸவ ஸமயத்தில் நடந்த சில துக்ககரமான ஸம்பவங்களை ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இவைகளை யெல்லாம் நம் ஸம்ப்ரதாயாபிமாநிகள் கவனித்துத் தக்க பரிஹாரம் தேடவேணும். ஸமீபத்தில் நடந்த ஆராவமுதன் உத்ஸவத்தில் (5, 6, 7, உத்ஸவங்கள்) மூன்று தினங்களிலும் ஹரிஜன ஆலய ப்ரவேச கோலாஹலம் வெகு ப்ரபலமாக நடந்தது. இங்கிலீஷ் தமிழ் பத்ரிகைகளில் இந்த ஸமாசாரம் வெளியாகியிருக்கிறது. ஆனால் விவரம் காட்டப்படவில்லை. சுமார் நூறு ஹரிஜனங்கள் 'தீண்டாமை ஒழிக' 'ஜாதிபேதம் ஒழிக' என்ற கோஷத்துடன், இடையில் ராமநாம பஜனமும் செய்துகொண்டு கோவிலில் நுழைந்தார்கள். ஆரம்பத்தில் சிறிது ஆக்ஷேபம் தெரிவிக்கப்பட்டபோதிலும், பிறகு அவர்கள் பெருமாள் தாயார் கர்ப்ப க்ருஹம் யாகசாலை முதலிய பல இடங்களிலும் ப்ரவேசித்து ஸகல மர்யாதைகளையும் பெற்றார்கள். தீர்த்தம் சடாரி வகைராவும் நடந்தன. பிறகு அவர்கள் வீதியில் பெருமாளுடன் வேத பாராயண கோஷ்டிக்குச் சில அடி தூரத்தில் பஜனை செய்துகொண்டு போனார்கள். வேதகோஷ்டி அவர்களுக்குப் பின்னால் சென்றது. பொது ஜனங்கள் இதைப் பார்த்து அடைந்த வருத்தம் அளவற்றது. கோஷ்டிக்கு நடக்கவேண்டிய சடாரி மர்யாதையும் சில ஸமயம் நடத்த முடியாமல் போய்விட்டது. இவ்வாறு நிர்ப்பந்த முறையால் கார்யம் செய்வது ஆலயப்ரவேசச் சட்டத்திற்கு ஏற்றதா வென்பதை ஸர்க்கார் கவனிக்கவேண்டியது.

இதில் வைதிகர் நடந்துகொண்ட முறை ரொம்பவும் சோகிக்கத்தக்கது. காஞ்சீபுரத்தை விட குடந்தையில் நடந்தது பெரிய தர்ம விப்லவமாகும். கோவிலில் இரண்டு வருஷங்களுக்கு முன் ஆலய ப்ரவேசம் நடந்தது முதல், உள்ளூர் வைதிகர்கள் அத்யாபி கோவிலை விட்டு விலகியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்த சைத்ர உத்ஸவத்திற்காக வடதேசத்தார் தருவிக்கப்பட்டனர் கோஷ்டியில் இருந்த யாவரும் வட தேசத்தவர்களே. உள்ளூராரோ, தென் தேசத்தவரோ, ஒருவர் கூட கோஷ்டியில் இல்லை. உத்ஸவ மத்தியில் ப்ரவேசம் நடந்தபோது இவர்களும் கோயிலுக்குள்ளேயே இருந்தார்கள். ஹரிஜனங்களுக்குப் பின்னால் உத்கோஷித்து வேதம் சொல்லிக்கொண்டு போனார்கள், அவர்கள் சிரஸ்ஸில் வைத்த சடாரியை இவர்களும் பெற்றார்கள். ஹரிஜனங்கள் வேதகோஷ்டிமேல் ஊடுருவிப் பாய்ந்து ஸம்பந்தப்பட்ட ஸமயத்திலும் பாராயணக்காரர்கள் பின்வாங்காமல் வேதமோதி நின்றார்கள். சிஷ்டரென்றும் வ்யபதிஷ்டரென்றும் நினைக்கப்பட்டவர் முன்னணியில் நின்று இவ்வளவையும் செய்துவைத்தார். ஊர் முழுவதும் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. வேத வைதிக ஸம்ரக்ஷகனை ஆராவமுதன் முன்னிலையிலேயே வைதிக தர்மம் நசுக்கப்படுவதைப் பார்த்துத் துக்கிக்காத ஆஸ்திகரே கிடையாது. தீண்டாமை கிடையாதென்றும் ஆலய ப்ரவேசத்தால் அசுத்தி ஏற்படாதென்றும் வாதம் செய்கிற சீர்திருத்த கக்ஷியை இவர்கள் பூர்ணமாக அங்கீகரித்ததாக ஏற்படுகிறது. தந பல மிருந்தால் தர்மத்தை நசுக்க முடியு மென்பது குடந்தை ஸம்பவத்தால் உறுதிப்படுகிறது.

ஸம்பாதரின் குறிப்பில் "இது விஷயத்தில் ஒருவித ஔதாஸீந்யம் ஸர்வத்ர வ்யாபித்திருக்கிறதோ என்று ஆஸ்திகர்கள் பயப்படுகிறார்கள்" என்று எழுதியிருப்பது உண்மையே. ஔதாஸீந்யம் மட்டுமில்லை. விபரீத ப்ரவ்ருத்தியும் ஸங்கேதமாக நடக்கிற

தென்பது குடந்தை ஸம்பவத்தால் நிச்சயமாகிறது. இம்மாதிரி நமது சாஸ்த்ர நியமங்களுக்கும், நமது ஸமூஹத்திற்கும் ஏற்பட்டுள்ள பிதிகரமான ப்ரவ்ருத்தியை உடனே நிவர்த்திக்க அந்தந்த ஸம்ப்ரதாய ஆசார்யர்கள் தக்க முயற்சி எடுத்து வழிகாட்டினலொழிய கத்யந்தரமில்லை.

சே. ஸ்ரீநிவாஸ தாஸன்.

*　　*　　*　　*

## ஸ்ரீ க்ருஷ்ண ஸபா, மாதுங்கா, பம்பாய்.

ஷை ஸபையின் சார்பில் ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி 15-5-49 முதல் 5-6-49 வரையில் ஸ்ரீ பகவத் கீதா பாஷ்யம் முழுவதும், ஸ்ரீமத் பாகவதத்தினின்றும் குசேல த்ருவ ருக்மாங்கத அம்பரீஷ ஸ்ரீ ருக்மணீ கல்யாணம் முதலிய அநேக திவ்ய சரித்ரங்களை மிகுந்த உத்ஸாஹத்துடன் வெகு அழகாய் உபந்யஸித்தருளினர்.

V. ஸ்ரீநிவாஸன் — G. சாரங்கபாணி.
[கார்யதர்சிகள்]

---

ஸ்ரீ:
ஸ்ரீமதே ஸ்ரீராமாநுஜாய நம:

# ஆலய ப்ரவேசம்

[ஸ்ரீ. உப. வித்வான் முடும்பி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, பெருகவாழ்ந்தான்.]

1 உதாரம் ஸ்ரீமத்ஸதாஸ்ருதேஷு ஸ்வஜநேஷ்வதீதா ப்ரஸாதம்:
ப்ராக்ருதைஷ ஸ்வயமேவ நாப்யவஸாயோத்ஸ்வஜநேஷ்வதம் ।
தஸ்ய க்ருபாகூ ப்ரதிதமதம் ஸம்ஸ்ரிதவர்க்கஸ்ய ஸம்ஸாரஸாக்தம்
ஸ்ரீமந்நாம மதிமதா வேதஷு ஸாக்ஷாத்விவாத நித்யம் நா ॥

2 ஸுப்ரஸித்தம் மஹாதிலிஷ்டதம் வேதம் ச ஸமுத்தமம்:
உதக்ருஷ்வைவ உபாஸநீயா ஸமவலத்ரவர அமாநுஷாமந்தி ।
ஸ்ரீமந்நாராயணயா கீர்த்ய ப்ரபந்நா ஸவேத ப்ரபோ வதந்தே
ஹேதவ: காருண்ய ஹேதி ஸாயநம் ந வ அ: காருண்ய நதவைஷ்ணவீதா ॥

3 யத்ஸ்யா நிரயத்ருஷ்டி விவ்ஹம் ஹரிஸ்யாம் யதாட்ட ஸ்வதா
தாதரம் ஸாயநஜநாம்ஸ்ய ஸமஷ்டவாத: ஸ்ஸ்யாவதாரம் வநா ।
ஸ்ராத்தம் ஸ்வதந விஷ்ணுதத்கரணஸ்தத்வ ப்ரதிஷ்டா ஹரி:
ஜோவம் சை ந வநோ ஸவேதிதி அ ஸ ப்ராஹ ஸ்வஹத்தம் ப்ரதி ॥

4 விஷ்ணுஸ்மரிதத்வேதத்வ ஸாயநஸ்ஸாஸ்ரவிஸ்ராவிந:
ஸந்தோ தோஷதியள கருள அ ஸாமதி ப்ராவேத்ய கவஸாஸ்யா: ।
வத்த்தே ஹரவதரா ஸ்மரணாத்ஸ்தாவநாதி கூராக
த்ரஷ்டாஸ்வேஷ உஹஸ்தா வஸதயா கரயாத்த்ரவாம்ஸோபா அர்த்த: ॥

5 𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌜𑍍𑌞𑍍𑌯𑌜 𑌨𑌾𑌮𑌧𑍇𑌯𑍋 𑌯𑌦𑌿 𑌹𑍍𑌯𑍇𑌵𑌂 𑌕𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌜𑌾𑌤𑌾𑌪𑌿 𑌚
𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌾𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾𑌯𑌾 𑌪𑍍𑌰𑌵𑍀𑌃 𑌪𑌰𑌿𑌹𑍃𑌤𑌿𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌾𑌂𑌚
𑌰𑌾𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌯 ।
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌹𑍍𑌯𑌵𑌧𑌾𑌰𑍍𑌯𑍈𑌷 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌾𑌨𑍍 𑌨𑌾𑌥𑌸𑍍
𑌨𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑍇𑌦𑌿𑌹 𑌭𑍋𑌜𑌨𑌂 𑌤𑌵 𑌭𑌵𑍇 𑌕𑌾𑌯𑌂 𑌕𑌿𑌮𑍇𑌤𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

6 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌯𑌵𑍋
𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑌿 𑌵𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 ।
𑌦𑍋𑌷𑍌𑌘𑍋𑌽𑌦𑍍𑌯𑌾𑌤𑌿𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌵𑌤𑌾𑌰 𑌇𑌤𑌿 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌗𑌨𑍍𑌤𑌕𑌾𑌯𑌂 𑌸𑍍𑌵𑌯𑌾𑌨𑌃
𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌾𑌸𑍂𑌯𑌾𑌸𑌿𑌤𑌂 𑌵𑌿𑌬𑍋𑌧𑍍𑌯 𑌹𑍃𑌦𑌿 𑌤𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑌰𑍍𑌧𑌯 ॥

7 𑌚𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾 𑌯𑌦𑌿 𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌸𑍀 𑌹𑌰𑌿𑌵𑌰𑍍𑌣𑌾 𑌹𑌰𑍇𑌃
𑌶𑌿𑌕𑍍𑌷𑌾𑌂 𑌕𑌾𑌮𑌵𑌿 𑌸𑌂𑌸𑌾𑌰𑌂 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑌾𑌕𑌂 𑌦𑍇𑌨𑌾𑌂 𑌵𑍃𑌷𑌾𑌣𑌾𑌂 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌗𑌮𑌵𑌨 𑌤𑌦𑌿𑌷𑍁 𑌚 𑌦𑌿𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌦𑍍𑌦𑌤𑍍𑌤𑌂
𑌜𑌾𑌨𑍀𑌤𑍇 𑌨 𑌵𑌯𑌂 𑌵𑌦 𑌕𑍍𑌷𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑌵𑌜𑍍𑌞 𑌸𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 ॥

8 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌯 𑌉𑌷𑌃𑌸𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌤𑌃𑌕𑍍𑌷𑌣𑍇 𑌚𑍈𑌵𑌂 𑌚𑌰𑌾
𑌵𑌿𑌷𑍍𑌣𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑍇𑌽𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌨𑌿𑌜𑌸𑍍𑌵𑌪𑌰𑌿𑌦𑍀𑌪𑍍𑌤𑌂 𑌸𑌜𑍍𑌜𑌨𑍈𑌃 ।
𑌵𑌶𑍍𑌯𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌯𑌥𑍇 𑌯𑌤𑍀𑌶𑍍𑌵𑌰 𑌤𑌮𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌵𑌯𑌾𑌤𑍍
𑌶𑍍𑌲𑍋𑌕𑌂 𑌤𑌾𑌨𑍍 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌸𑍍𑌵 𑌭𑌵𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌮𑌯𑍇 𑌸𑌦𑌾 𑌨𑌹𑌾𑌕𑌃 ॥

9 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌣𑍍𑌵𑌾𑌪𑌿𑌵𑌾𑌰𑍍𑌯𑍈𑌷 𑌸𑌕𑌰𑍍𑌣𑍇𑌷𑌾𑌰𑌾𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌨𑌾𑌶𑍍𑌵𑌰𑌾
𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌧𑍍𑌯𑌂 𑌯𑌦𑌿 𑌚𑍈𑌵 𑌤𑌾𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑌵𑌾𑌸𑍍𑌯 𑌤𑌮𑍍𑌣𑍀𑌂 𑌕𑌾𑌤𑌃 ।
𑌤𑌾𑌸𑌾𑌮𑍇𑌤𑌦𑍍𑌭𑌸𑍍𑌮𑌿𑌤𑌂 𑌯𑌦𑌿 𑌚 𑌨𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌭𑍂𑌤𑍇𑌷𑌾𑌂 𑌭𑌯𑌂
𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌿𑌧𑌾𑌨𑌯𑍇𑌯𑌾𑌦𑍇𑌵 𑌨 𑌤𑌥𑌾𑌕𑌾𑌪𑌿 𑌭𑌿𑌤𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑍈𑌵𑌤𑌾 ॥

10 𑌗𑍀𑌵𑌾𑌣𑌾𑌯𑌦𑌿 𑌵𑍀𑌚𑌿 𑌤𑌾𑌦𑌿 𑌕𑌿𑌸𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑌸𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑍍𑌯𑌾𑌗𑌿𑌨𑌃
𑌉𑌷𑌂 𑌸𑌵𑌾𑌚 𑌨𑌿𑌷𑍍𑌵𑌾𑌰𑌣𑌾𑌚𑌿 𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌾𑌰𑍍𑌯𑌾𑌶𑌯 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑍇 𑌚𑌾𑌹𑌾𑌨𑍍𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌤𑌂 𑌵𑌾𑌨𑍍𑌤𑌾𑌣𑍇 𑌤𑌥𑌾
𑌭𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌸𑌮𑌜𑍇 𑌡 𑌸𑌦𑌵𑌦𑌤𑍇 𑌵𑍍𑌯𑌾𑌤𑌾𑌸𑍍𑌵𑌯𑌾 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 ॥

11 𑌤𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌚𑌾𑌵𑌮𑌙𑍍𑌗𑌾𑌚𑌕𑍍𑌷𑌚 𑌤𑌯𑌾 𑌯𑌾 𑌅𑌾𑌚𑌹𑍋𑌟𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑍂𑌪𑍋𑌦𑌯𑌿𑌚𑍇𑌵𑌚𑍇𑌵𑌭𑌵𑌤𑌾𑌭𑌾𑌵𑌂 𑌨𑌿𑌮𑍀𑌕𑌂 𑌸𑌤𑌾𑌮𑍍 ।
𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑍇 𑌵𑌿𑌭𑌾𑌵𑍍𑌯𑌵𑌕𑍍𑌤𑌾𑌚𑌵 𑌨𑌳𑌪𑌕𑍍𑌤𑌃 𑌕𑌿𑌚𑌾𑌶𑍍𑌲𑍇𑌟𑌯𑌾𑌨𑌾 ।
𑌵𑍇𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑍍 𑌬𑌹𑍁𑌵𑍋𑌽𑌪𑌿𑌦𑌿𑌜𑍍𑌞𑌿𑌕𑌾𑌪𑍁𑌰𑌾𑌃 𑌵𑌕𑍍𑌤𑌾𑌣𑍍𑌯𑍋𑌗𑍀𑌪𑌵𑌕𑌃 ॥

12 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑌾𑌯𑌣 𑌕𑌾𑌰𑌿𑌣 𑌸𑍍𑌵𑌯𑌿𑌭𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌦𑍇𑌵𑌸𑍀𑌵𑌣𑌦𑌿𑌂
𑌕𑌾𑌵𑌚𑍁𑌙𑍍𑌦𑍍𑌯𑌦𑍍𑌯 𑌨𑌵𑌪𑌵𑌚𑌵𑌰𑌿𑌰 𑌕𑍃𑌤𑌂 𑌵𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌗𑍀𑌙𑍍𑌯𑌾 ।
𑌤𑌨𑍍𑌮𑍀𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑌾𑌚𑌵𑌿 𑌤𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿 𑌕𑌿𑌚𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌵 𑌅𑌾𑌰𑍇𑌹𑍍𑌯𑌪𑌚
𑌜𑌾𑌨𑍀𑌤𑍇 𑌨𑌵𑌯𑌂 𑌸𑍍𑌵𑌾𑌪𑍁𑌂 𑌭𑌗𑌵𑌦𑌤𑌾 𑌭𑌾𑌵𑌂 𑌕𑌿𑌚𑌦𑍍𑌰𑍋𑌪𑌿𑌤𑌮𑍍 ॥

13 𑌣𑌵𑌂𑌕𑍇𑌅 𑌨 𑌸𑌙𑍍𑌗𑌿 𑌅𑌘𑌾 𑌦𑌿𑌵𑌿𑌦𑌶𑍍𑌵𑌿𑌣𑌾 𑌨𑌿𑌚𑌭𑍍𑌰𑌾𑌶𑍍𑌵𑌿𑌰𑌾𑌕𑌃
𑌸𑍍𑌵𑌾𑌦𑌿𑌸𑍀𑌶𑌵𑌰𑍀𑌕𑍍𑌷𑌹𑍋𑌭𑌯𑌯𑌾 𑌤𑌾𑌨𑍍 𑌦𑍋𑌷𑌾𑌕𑍍𑌷𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌚 ।
𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑌾𑌣𑌾𑌸𑍍𑌪𑌾𑌰𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌯𑌳 𑌤𑍇 𑌸𑌙𑍍𑌦𑍍𑌯𑍇𑌨𑌕𑍇𑌘𑌾𑌤𑌾𑌃
𑌸𑌤𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌵𑌰𑌾𑌯𑌣𑍋 𑌹𑌰𑌿𑌰𑌿𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌤𑍍𑌯𑌚𑍁𑌯𑌾𑌯𑌚𑌾 𑌨𑌵𑌾 ॥

[தொடரும்]

ஸ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

# ஸம்பாதகரின் குறிப்புக்கள்

நாளது விரோதி ஹூ. ஆனி மீ". 27வ (10-7-49) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் திருவெவ்வுளூரில் உபக்ரமித்து நடக்கிறபடியால், ஷை மஹோத்ஸவத்துக்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பக்தர்கள் எல்லாரும் எழுந்தருளி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் ஸேவித்துக்கொண்டு, ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுக்ரஹத்தையும் பல மந்த்ராக்ஷதைகளையும் பெற்றுக்கொள்ள வேணும்.

**ஸ்ரீ அழகிய சிங்கரின் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம்**

*　　　*　　　*　　　*

இவ்வர்ஷத்துப் பரீக்ஷைகளுக்கு அனுப்பப்பட்ட வித்யார்த்திகளெல்லாரும் ஒருவர்கூட விலக்கின்றிக்கே ஸித்தியை அடைந்துவிட்டார்களென்னும் ஸந்தோஷ ஸமாசாரத்தை நாம் நமது ஸுஹ்ருத்துக்களுக்கு இது வழியாக விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம். சிலர் முதல் வகுப்பில் தேறுவதான நிஷ்பத்தியைப் பெறுவார்களென்று ப்ரதீக்ஷித்திருந்தோம். அது ப்ராப்தமில்லை. வித்யார்த்திகளெல்லாரும் ப்ராயேண புத்திமான்களே. ஆனால் சிலர் ச்ரத்தா ஹீநர்களாக இருப்பதாக நாம் அறிகிறோம். அத்யாத்ம வித்யையை அப்யஸிக்கவேண்டுமென்னும் அபிஸந்தியுடன் பாடசாலையைச் சேருமவர்கள் ச்ரத்தா ஹீநர்களாக இருப்பது உசிதமன்று. ஸ்ரீ அழகிய சிங்கருடைய மநோபாவம் இந்த விஷயத்தில் மிகுந்த உத்ஸாஹத்துடன் இருப்பதை உணர்ந்து, நமது வித்யார்த்திகளெல்லாரும் இனிக் குறைவற்ற

**ஸ்ரீ சாஸ்த்ர பாடசாலை மதுராந்தகம்**

ச்ரத்தையுடனும் உத்ஸாஹத்துடனும் பாடங்களைப் படித்துப் பரீக்ஷையில் எல்லாரும் ச்லாகிக்கக்கூடிய ஸித்தியைப் பெறுவார்களென்று நாம் நம்புகிறோம்.

*  *  *  *

**நாதமுனிகளைப் போன்ற ஆசார்யர்களும் தமிழ்ப் பாஷையும்**

ஸ்ரீ தேசிகன் சிஷ்யக்ருத்யத்தை விவரித்துக்கொண்டு வருகையில், சிஷ்யனுக்கு ஆசார்யனிடம் குறைவற்ற பக்தி வேண்டுமென்றும், அந்தப் பக்தியினால் அந்தக் குருவினிடமுள்ள அநர்க்க ரத்நம் போன்ற குணங்களை எப்பொழுதும் கொண்டாடிக் கொண்டிருக்கவேண்டுமென்றும், அந்தக் குருவின் க்ருஹ க்ஷேத்ராதிகளிலும் க்ராமாதிகளிலும் அளவற்ற பஹுமாநம் செய்ய வேண்டுமென்றும்,

“ ஸம்யக்தர்மம் ... ஸ்ரீ:
... ।
... ஸம்ப்ரதாயம்
... ॥ ”

என்னும் ச்லோகத்தால் அநுக்ரஹித்திருக்கிறார். இந்த ரீதியில் ஸ்ரீமந்நாதமுனிகள் அந்தக் குரு சிஷ்ய க்ரமத்தைத் தமது ஆசார்யர்களான ஆழ்வார்கள் விஷயத்தில் எவ்வளவு தூரம் ஆதரித்திருக்கிறாரென்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நாதமுனிகள் நம்மாழ்வாருடைய அந்தரங்க சிஷ்யராக இருக்கும் பக்ஷத்தில், ஆழ்வார் காட்டின வழியிலன்றோ இவர் நடந்திருக்கவேண்டும்? அப்படி நாதமுனிகள் நடந்திருப்பதாக ஏற்படவில்லையே! ஆழ்வார்கள் வேதாந்த ரஹஸ்யார்த்தங்களைத் தமிழ்ப் பாஷையில் தெளிய ஓதியிருக்கிறார்கள் ஆழ்வார்களுக்கு முன் வ்யாஸ பராசராதி மஹர்ஷிகளெல்லாரும் தமிழைப் பற்றி ஆலோசித்ததாகவே தெரியவில்லை. அப்படியிருக்க: ஆழ்வார்கள் மாத்ரம் தமிழில் இறங்குவதற்கு ஏதாவது பலமான காரணம் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆத்ம வித்யை ஸர்வ ஜநோபகாரகமாக இருத்தல் வேண்டுமென்றும், தன்னுடைய உபதேசம் ஸம்ஸ்க்ருதத்தில் மாத்ரம் இருந்தால், அது, ஸம்ஸ்க்ருதம் அறியாதவர்களுக்கு ப்ரயோஜநப்படமாட்டாதென்றும் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீபகவான் ஆழ்வார்களெல்லாரும் அத்யுதார சித்தர்களாக இருப்பதைப் பார்த்து, ‘உங்களுடைய க்ரந்தங்களை ஸர்வ ஜநோபஜீவ்யமான தமிழ்ப் பாஷையில் எழுதுங்கோள்’ என்று ஆழ்வார்களை ப்ரவர்த்திப்பித்திருக்கலாம். அப்படியிருந்தால், நம்மாழ்வாருடைய ப்ரிய சிஷ்யரான நாதமுனிகளும், ‘ஆசார்யன் காட்டிப் போந்த தொல்வழியே நமக்கும் நல்வழியாம்’ என்றுணர்ந்து, தாம் செய்த க்ரந்தங்களைத் தமிழில் செய்திருக்கவேண்டாமா? நம்மாழ்வார் திருவடி தவிர வேறொன்றும் அறியாத மதுரகவிகள், ஆழ்வாரைப் பின்பற்றிக் ‘கண்ணிநுண் சிறுத்தாம்பு’ என்னும் ஒரு த்ராவிட ப்ரபந்தத்தை அருளிச்செய்ய வில்லையா? நாதமுனிகளுக்குப்

பின்வந்த ஆசார்யர்கள் கூட இந்த ந்யாயத்தை மறந்து ஸம்ஸ்க்ருதத்திலேயே இறங்கிவிட்டார்களே! இது என்? இவ்வாறு ஆசார்யர்கள் காட்டின வழியை விட்டு விலகி நடப்பது அபராதமாக மாட்டாதா? இம்மாதிரி ஒரு ஶங்கை ஜநிக்கிறது. ஸ்ரீ தேஶிகன் மாத்ரம் இந்த ஶங்கைக்கு இடங்கொடாமல் இரண்டு பாஷைகளிலும் அநேக க்ரந்தங்களை அநுக்ரஹித்திருக்கிறார்.

இந்த ஶங்கையை இவ்வாறு பரிஹரிக்க லாமென்று தோன்றுகிறது. ஆழ்வார் காலத்துக்குப் பிறகு — நாதமுனிகள் காலத்துக்குமுன் — அநேக அத்வைதிகள், ஆழ்வார்களால் உபதேஶிக்கப்பட்ட விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை, வேத ஶாஸ்த்ர விரோதிகளான அநேக அஸத் தர்க்கங்களை ப்ரயோகித்துத் தூஷித்திருக்கலாம். அந்தத் தூஷணங்களின் தோஷங்களை வெளியிடுவதற்கு, தர்க்க ஶாஸ்த்ரத்திற்கு இணைந்து வரும் ஸம்ஸ்க்ருத பாஷையே தக்க பாஷையாகு மன்றோ? வாதிகள் சொல்லும் வாதங்களிலுள்ள தோஷங்கள் எந்தப் பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றனவோ, அந்தப் பாஷையிலேயே அதிலுள்ள தோஷங்களை எடுத்துக் காட்டுவதே உசிதம். வேறு பாஷையில் ப்ரதிவாதம் செய்யும்பக்ஷத்தில், தூஷிப்பவன் அந்தப் பாஷைக்கு அநபிஜ்ஞனாக இருந்தாலும், அதில் அவனுக்கு வ்யுத்பத்தி மந்தமாக இருந்தாலும், வாதிகளின் ப்ரதிவாதம் வ்யர்த்தமாகப் போனாலும் போகலாம். இவை எல்லாவற்றையும் உத்தேஶித்தே ஸ்ரீ தேஶிகாதிகள் ஶததூஷணி முதலிய க்ரந்தங்களை ஸம்ஸ்க்ருதத்திலேயே அநுக்ரஹித்திருக்கிறார்கள். ஆகையால் நாதமுனிகளுடைய பந்தா எவ்வித அபசாரத்துக்கும் ஹேதுவாகமாட்டா தென்று சொல்லக் கூடாதா? ஆழ்வார்கள் தீர்க்க தர்ஶிகள்; ப்ராஹ்மணேதரர்களுக்கும் ஆத்மோஜ்ஜீவந மார்க்கத்தை உபதேஶிப்பது பகவானுடைய திருவுள்ளத்துக்கு உகந்ததே யென்பது அவர்களுடைய அந்தரங்க அபிப்ராயம். அவர்களுடைய ப்ரபந்தங்களால் அத்யாத்ம வித்யை எவ்வளவு அபிவ்ருத்தி யடைந்த தென்பது, அந்த ப்ரபந்தங்களை ஸேவித்தவர்களுக்கு நன்கு தெரியவரும். இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் ஆயிரக்கணக்கான ஸாத்விக ஜநங்களுக்கு உபகாரகமாகவும் இருந்திருக்கும். அப்படி யிருந்தால் இப்போது மஹத்தான ப்ரபாவத்துடன் விளங்கிவரும் பட்டர் நடாதூரம்மாள் ஸ்ரீதேஶிகன் இவர்களுடைய ரஸகநங்களான திவ்யஸூக்திகளை இழக்க நேர்ந்திருக்கும். இந்த விஷயத்தின் ப்ராதாந்யத்தை உணர்ந்தே ஸ்ரீ தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஆழ்வார்களுடைய மார்க்கத்தைக் கைவிடாமல் தமிழில் சிறந்த க்ரந்தங்களை அநுக்ரஹித்திருக்கிறார்க ளன்றோ?

ஸ்ரீமந்நாதமுனிகளுக்குப் பிறகு, ஸ்ரீ உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி ஆளவந்தார் பாஷ்யகாரர் — இவர்களுடைய ப்ரபாவம் ஸ்ரீ வைஷ்ணவர்க ளெல்லாருக்கும் ஸுவிதிதம். ஸ்ரீ உய்யக்கொண்டாரும் மணக்கால் நம்பியும், மஹத்தான பக்தியுடனும் உத்ஸாஹத்துடனும் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துகொண்டிருந்தார்க ளென்று மாத்ரம் நாம் அறிகிறோம். அம்மாதிரியே ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்த பெரியதிருமலைநம்பி பெரிய நம்பி திருக்கச்சிநம்பி முதலியவர்களுடைய திருநாமங்கள், அவரவர்களுடைய

பக்த்யதிசயத்தால் ஸங்கீர்த்தநார்ஹங்க ளாகின்றனவேயொழிய க்ரந்த நிர்மா ணங்களால் ப்ரஸித்தி யடையவில்லை. நிற்க: பெரியநம்பி முதலியவர்கள் ஸ்ரீ பாஷ்யகாரருக்குச் சிற்சில ரஹஸ்யங்களின் உபதேஷ்டாவானுர்க ளென்பது அவர்களுக்கு ஒருவித ஏற்றத்தைக் கொடுத்தது. அவர்களுடைய சிஷ்யராக வெளிவந்த ஸ்ரீ பாஷ்யகாரருடைய பெருமையோ, நமது ஸித்தாந்த ஸ்தாப நத்திற்கு அத்யந்தோபகாரகமான ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களின் நிர்மா ணத்தாலேயே வாசாமகோசரமாகப் பரவியிருக்கிறது. ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸ்ரீ ஆளவந்தார் ஸாக்ஷாத் ஆசார்யராக இல்லாவிட்டாலும், க்ரந்த த்வாரா ஸ்ரீ பாஷ்யகாரருக்கு அவரை முக்யமான ஆசார்யரென்று சொல்லலாம். ஸ்ரீ ஆள வந்தாருடைய ஸித்தித்ரயத்தில் உபதேசிக்கப்பட்டுள்ள விஷயங்களே ப்ரா யேண ஸ்ரீ பாஷ்யாதிகளில் வெளிவந்திருக்கின்றன. ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹத்தையும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய கீதாபாஷ்யத்தையும் ஸேவித்தவர்களுக்கு, ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ ஆளவந்தாரை எப்படிக் கொண்டாடி யிருக்கிறு ரென்பது நன்கு விளங்கும். இம்மாதிரியே ஸ்ரீ பாஷ்யகாரருக்குப் பிறகு க்ரந்தங்களால் ஜகத்துக்கு மஹத்தான உபகாரத்தைச் செய்த ஆசார்ய ரத்நங்கள் அநேகர் உண்டு. அவர்கள்:—ஸ்ரீ கூரத்தாழ்வான், பராசரபட்டர், ஸ்ரீ நடாதூரம்மாள், ஸ்ரீ ஸுதர்சநாசார்யர், ஸ்ரீ கடாம்பி வம்சத்து ஆசார் யர்கள், இவர்களுடன் ஸம்பந்தம் பெற்று அதனுல் ப்ரஸித்தி யடைந்த ஸ்ரீ கோவிந்த பட்டர், முதலியாண்டான், எங்களாழ்வான் முதலிய அநேகர். இவர்களுடைய ப்ரபாவம் அடுத்த ஸஞ்சிகையில் வெளியாம்.

*　　　*　　　*　　　*

**க்ராமப் பஞ்சாதித்**

பாச்சாத்ய ராஜ்யம் போய் நம்மிடமே ராஜ்ய பரிபாலநம் வந்துவிட்ட தாக நாம் ஸந்தோஷிக்கிறோம். வஸ்து ஸ்திதியோ விபரீதமாகக் காணப் படுகிறது. முற்காலத்தில் ஸாமாந்ய உத்யோகங்களில் ஸ்வல்ப சம்பளத்தில் வேலையாக இருந்தவர்கள் மாத்ரம் பெரும்பாலும் சட்ட விருத்தமான ப்ரவ்ருத்தியிற் சென்று சிற்சில அக்ரமங்களைச் செய்துவந்தார்கள். ஸ்வராஜ்யம் வந்துவிட்டால் இவைகளும் சீர்திருத்த மடைந்துவிடு மென்று நம்பியிருந்தோம். இப்பொழுது நடக்கும் வ்யாபாரங்களைப் பார்க்கும்பொழுது அக்ரமங்கள் ஸாமாந்ய ஜநங்க ளுள் மாத்ர மில்லாமல், பெரிய உத்யோகங்களில் ஆயிரக் கணக்கான ரூபாய் சம்பளம் வாங்குவோர்களிடமும் காணப்படுகின்றனவென்று தெரியவருகிறது. எவர்கள் ந்யாயாதிபத்யத்தை வஹித்துத் துர்மார்க்கங்களில் போகிறவர்களை சிக்ஷிக்கும் அதிகாரத்தை வஹிக்கிறுர்களோ, அவர்களே அக்ரமங்களைச் செய் யத் துணிகிறுர்களே! ‘நாம் இவ்விடத்திற் செய்யும் அக்ரமங்களுக்குப் பின் னிட்டு நரக லோக மொன்று உண்டு; அதில் நம்முடைய அக்ரமங்களுக் குத் தக்கவாறு தண்ட விதியை அநுபவிக்க வேண்டும்’ என்னும் பயம் மக்களுக்குள் அடியோடு மாறிவிட்டது. லோகத்தில் பயத்திறுலேயே பாதி அக்ரமங்கள் தடைப்பட்டு நிற்கின்றன. அந்தப் பயம் நீங்கிவிட்டால் லோகாநு பவம் மாறியே விடும். தேவதைகளும் தம்தம் அதிகாரத்தைத் தைவத்தின் நிக்ர

ஹத்துக்குப் பயந்தே ஒழுங்கு தவருமல் செய்து வருகிருர்க ளென்று வேதம் சொல்லுகின்றது. [பீஷாஸ்மாத்வாத: பவதே। பீஷோதேதி ஸூர்ய:....'] ஆகையால் 'நாம் தவறி நடந்தால் ஶிக்ஷைக்குப் பாத்ர மாவோம்' என்னும் தத்வத்தை அரசாங்கத்தார் தமது ப்ரஜைகளிடம் த்ருடமாகப் போதிப்பித்தல் தான் இந்தத் துர்த்தஶையை மாற்றும். 'அதெல்லாம் பொய்க்கதை' என்னும் ஜ்ஞாநத்தை நமது சிறுவர்களிடம் நாம் வளர்த்துவந்தால், ஜகத்துக்குப் பெருத்த தீமையே வளரு மென்பதில் ஆக்ஷேப மில்லை.

இது இருக்கட்டும். இப்பொழுது நமது ஜநங்கள் எந்த ஸ்திதியி லிருக்கிருர்க ளென்பதை உள்ளபடி தெரிந்துகொள்ளாமல் அநேக சீர்திருத்தங்களைச் செய்ய ப்ரயத்நப்படுகிறோம். 'க்ராமப் பஞ்சாதித்' என்னும் பெரியதொரு சீர்திருத்தம் வரப்போகிறதாம். இப்பொழுது, ஸிவில், க்ரிமினல், கல்வி யிலாகா, இஞ்ஜினீயரிங் இலாகா, போலீஸ், ரெஜிஸ்ட்ரேஷன் முதலிய ஸகல வ்யாபாரங்களும், ஸர்க்கார் இலாகாவால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளிடமே ஒப்புவிக்கப்பட் டிருக்கின்றன. நமக்கு ஏதேனும் ஒரு கார்யம் ஆகவேண்டுமானல், அந்தந்த அதிகாரிகளிடம் போய் நமது குற்றங் குறைகளை அவர்களால் விதிக்கப்படும் முறைகளுக்கு ஒத்துச் சொல்லிக்கொண்டே சரிப்படுத்திக்கொள்ளுகிறோம். இதில் பணச் செலவாவதுடன் கணக்கற்ற அஸௌகர்யங்களும் ஸம்பவிக்கின்றன. இதைப் பார்த்துப் பயந்து பாதி ஜநங்கள் தமது குற்றங் குறைகளைத் தீர்த்துக்கொள்ளாமலே விட்டுவிடுகிருர்கள். இந்தத் துஸ்திதியை நீக்க இப்பொழுது மந்த்ரிகள் ஒரு சீர்திருத்தத்தைச் செய்ய முயன்றுவருகிருர்க ளென்று நாம் அறிகிறோம். அது என்ன வென்றுல் :—ஒவ்வொரு க்ராமத்திலும் 10 அல்லது 15 ஜநங்களைப் பொறுக்கி, அவர்களிடம் கீழ்க் கூறப்பட்டுள்ள ஸகல வ்யாபாரங்களையும் நிர்வஹித்துப் பார்க்கும்படி ஒப்புவித்து விடுகிறது என்பதுதான் அச்சீர்திருத்தம். டாக்டர்கள் இஞ்ஜினீயர்கள் முதற்கொண்டு ஸகல உத்யோகஸ்தர்களையும் இந்த அதிகாரிகள் கால தேஶாநுகுணமாக ஜநங்களுடைய ஸௌகர்யத்தையே முக்யமாகக் கருதித் தாம் தாமே நியமித்துக்கொள்ளுகிறதாம். ஒவ்வொருவர் வந்து சொல்லிக்கொள்ளும் பிரியாதுகளை, அந்தந்த அதிகாரிகள் அந்தந்த ஸ்தலத்தின் நோக்கங்களை அறிந்தவர்க ளாதலால், அவைகளின் உண்மையை அதிக விளம்ப மிராமல் அறிந்து ஜநங்களுடைய ஸௌகர்யத்திற்கு ஒத்தும், ந்யாயத்துக்குப் பங்கம் வராமலும் செய்து வருவார்க ளன்றோ? இந்த ஏற்பாட்டை நாம் மிகவும் ஆமோதிக்கிறோம். ஆனல் நாம் உத்தேஶிக்கிறபடி ஒவ்வொரு க்ராமத்திலும் தமது ஸ்வய நன்மையைப் பெரிதாகப் பாராட்டாமல் மஹா ஜநங்களுடைய நன்மையையே ப்ரதாநமான கார்யமாகக் கவனிக்கவேண்டுமென்று எண்ணும் பெருந்தன்மையுள்ள பெரிய மநுஷ்யர்கள் எவ்வளவு பெயர்கள் வேண்டுமோ அவ்வளவு பெயர்கள் அகப்படுவார்களா என்பதுதான் நமது ஸந்தேஹம். ஸாமாந்யமாகப் பார்க்கும் பக்ஷத்தில் ஜநங்கள் பெரும்பான்மையாக அஸூயையும் காமக்ரோதங்களும் தலையெடுத்து நிற்கிறவர்களாகவே காணப்படுகிருர்களே யொழிய, நாம் உத்தேசிக்கிறபடி ஸாத்விக ஸ்வபாவமுள்ளவர்கள் நமக்கு யாவத்பேக்ஷம் கிடைக்கமாட்டார்க ளென்றே நாம்

பயப்படுகிறோம். இருந்தபோதிலும் கார்யம் நல்லதாகிறபடியால் நாம் அதை ஆமோதிக்கிறோம்.

* * * *

'ஸ்ரீராம ராஜ்யம்' என்னும் பெயருடன் வெளிவந்துள்ள புஸ்தகமொன்றை நாம் வரப்பெற்றோம். 'திருவரங்கம்' என்னும் பெயர்கொண்ட ஒருவர் இதை எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

'ஸ்ரீ ராம ராஜ்யம்' திருமலை திருப்பதி தேவஸ்தானத்தைச் சேர்ந்த சில ப்ரபுக்களுடைய உத்ஸாஹம் இந்த ப்ரவ்ருத்திக்கு முக்ய காரணமென்று நாம் நினைக்கிறோம். ஸ்ரீ வேங்கடேச்வர ஆராய்ச்சிச் சாலைத் தமிழாசிரியரும், ஆழ்ந்த தைவ பக்தி நிரம்பப் பெற்றவருமான ஸ்ரீ. T. P. பழநியப்ப பிள்ளை அவர்கள் இம்மாதிரி வெளிவரும் புஸ்தகங்களைச் சோதித்துக் கொடுப்பதாக அங்கீகரித்திருக்கிறாராம். இது, இப்புஸ்தகங்களின் வாசக நிலையின் ஏற்றத்திற்குப் போதுமான அத்தாட்சி. 'திருவரங்கம்' என்று பெயரை வஹிக்கும் இந்தப் புஸ்தகங்களின் கர்த்தாவாக வெளிவந்திருப்பவர், அந்தக் கலாசாலையில் ப்ரவசந கர்த்தாவாக அந்வயித்திருக்கும் ஸ்வாமியாக இருக்கும் பக்ஷத்தில், பத்ரிகையில் வெளிவரும் விஷயங்களும் ரஸவத்தாகவும் மஹாஜநங்களுக்கு உபகாரகமாகவுமிருக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை.

கலியின் மஹிமையால் பொய் புரட்டுக்கள் மலிந்து கிடக்கும் நாள் இது. ஸ்ரீராமன் ராஜ்ய பரிபாலநம் செய்துவந்த காலத்தில் ஜநங்களெல்லாரும் ஸ்ரீராம சந்த்ரனையே ஒவ்வொரு கார்யத்திலும் நிதர்சநமாக வைத்துக்கொண்டு, அவனுடைய திருவுள்ளத்திற்கு எந்த மார்க்கம் உகப்பாக இருக்குமோ வென்பதை ஆலோசித்துப் பார்த்து, அதற்கு இசைய அந்த மார்க்கத்திலேயே நடந்து வந்தார்கள்; ஆனதால், அப்பொழுது திருட்டுப் புரட்டுக்கள் ஒன்றும் அந்த ராஜ்யத்தில் அதிகமாகக் காணப்படாமல் இருந்தனவாம். அந்தக் கார்த்தயுக தர்மத்தை மறுபடியும் வரவழைக்கவேண்டுமென்பது இந்த ஆசிரியரின் நோக்கம். அவருக்கு அபேக்ஷிதமான ஸஹாயத்தைக் கொடுத்து, அவருடைய மநோரதம் நிறைவேறும்படி ஸ்ரீ வேங்கடேசன் அநுக்ரஹிக்கவேணுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

இந்த க்ரந்தத்தை ப்ரசுரித்திருக்கும் ஸ்வாமி இவ்வித புஸ்தகங்களை அடுத்தடுத்து வெளியிட உத்தேசித்திருப்பதாக நாம் அறிகிறோம். இப்புஸ்தகத்தின் க்ரயம் அணா 12. இதனை அபேக்ஷிப்பவர்கள் 'ராம ராஜ்யம்', நெ. 93, தெற்கு மாடவீதி, திருப்பதி" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

குறிப்பு :—ஸ்ரீ. உப. வேங்கடாத்ரி யகரம் வித்வான் அநந்தாசார்ய ஸ்வாமி, [தமிழ் உரையுடன் கூடின] 'ந்யாஸ விம்சதி' என்னும் க்ரந்தத்தையும், ப்ரமஹ்ஸ்ரீ வித்யா ஸாகர K. L. V. சாஸ்த்ரி என்பவர், தாம் வெளியிட்டிருக்கும் 'மஹாத்ம விஜயம்' என்னும் க்ரந்தத்தையும் மதிப்புரை செய்ய வேண்டி நமக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இவை இரண்டையும் அடுத்த ஸஞ்சிகையில் விமர்சிப்போம். [ஸம்பாதகர்]

ஸ்ரீ:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு

## [21-5-49 முதல் 20-6-49 வரை]

| | | | ரூ. |
|---|---|---|---|
| 30 | ஸ்ரீ. | K. வீரராகவையங்கார், ப்ளீடர், நாமக்கல் (48) .... | 3 |
| 31 | ,, | M. R. ரங்கஸாமி ஐயங்கார், மன்னார்குடி (47, 48) .... | 6 |
| 57 | ,, | N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வகெட், மதுரை (47, 48) .... | 6 |
| 102 | ,, | வடுவூர் K. ரகுநாதாசார்யர், ஆடுதுறை (48) .... | 3 |
| 150 | ,, | K. R. ஸ்ரீநிவாஸையங்கார், Rtd., Circle Inspector of Police, கோனேரிராஜபுரம் (47, 48) .... | 6 |
| 158 | ,, | V. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், காட்டாம்பட்டி, சேலம் (48) .... | 3 |
| 165 | ,, | வாத்யார் R. ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீரங்கம் (49) .... | 3 |
| 191 | ,, | V. K. கோதண்டராமன், வடுவூர் (47, 48) .... | 5 |
| 205 | ,, | K. வெங்கடாசார்யர், தளவாய்பேட் (49) .... | 3 |
| 207 | ,, | C. R. ஸ்ரீநிவாஸையங்கார், Asst. Board High School, வந்தவாசி (48, 49) .... | 6 |
| 287 | ,, | S. N. வேங்கடேச ஐயங்கார், அட்வொகெட், கோயம்பத்தூர் (48) .... | 3 |
| 306 | ,, | K. R. ராமாநுஜம், General Manager, S. I. Ry., திருச்சி (49) .... | 3 |
| 321 | ,, | R. வரதாசார்யர், B.A., L.T., சைதாப்பேட்டை (48) .... | 3 |
| 374 | ,, | V. ரங்கஸாமி, ஹிந்தி ப்ரசாரகர், சிதம்பரம் (49) .... | 3 |
| 443 | ,, | P. S. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீரங்கம் (49) .... | 3 |
| 623 | ,, | N. R. ராஜகோபாலாசாரியர், மேல் அக்ரஹாரம், ஸத்யமங்கலம் (48, 49) .... | 6 |
| 651 | ,, | ஸ்ரீ க்ருஷ்ண ஸபா, மாதுங்கா, பம்பாய் (49) .... | 3 |
| 734 | ,, | R. S. ராகவாசாரியர், மன்னார்குடி (49) .... | 3 |
| 790 | ,, | V. N. கோபாலையங்கார், B.A., B.L., தென்னூர் (49 .... | 3 |
| | | மொத்தம் ரூ. | 74 |

Regd. M. 4437.

ஸ்ரீ:

...ட்கும் ஏனையோர்க்கும் வைதிக
...ஹாரங்களைப் போதிப்பதில்
...னணியில் நிற்கும்

# ...ந்ருஸிம்ஹ ப்ரியா.

## இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.

## விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

| | | | |
|---|---|---|---|
| ராப்பர் வெளிப்புறம் | பக்கம் 1-க்கு | மீ 1-க்கு | ரூ. 20. |
| ,, உட்புறம் | ,, | ,, | ரூ. 15. |
| ஸஞ்சிகையின் உட்புறம் | ,, | ,, | ரூ. 10. |

ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.

இங்ஙனம்:

**மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.